




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 2018

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# “வாய்ப்புக்காக காத்திருக்காதே, வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்...

Main Office @

**Weshine Study Circle**

New No 4 Old No 8B 1st Floor, Rangaswamy Street,,
Near Adyar Ananda Bhavan
Chrompet, Chennai - 600044

**Phone :** 8939 144 344, 8939 244 344

Branch Office @

**Weshine Study Circle,**

**Anna nagar**

Plot No: 47/60, “AK” Block, 7th Main Road
Anna Nagar (Next to Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600 040.

**Adyar**

3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 04 - 07 | தமிழக நிகழ்வுகள் |
| 07 - 35 | தேசிய நிகழ்வுகள் |
| 36 - 49 | உலக நிகழ்வுகள் |
| 49 - 58 | விருதுகள் |
| 59 - 65 | நியமனங்கள் |
| 65 - 69 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் |
| 70 - 76 | விளையாட்டு நிகழ்வுகள் |
| 77 - 80 | பொருளாதார நிகழ்வுகள் |
| 81 - 89 | முக்கிய தினங்கள் |
| 89 - 90 | புத்தகங்கள் |













# தமிழக நிகழ்வுகள்

1. 9 ஆவது இந்திய உடலுறுப்புதானதினத்தில்,உடலுறுப்புதானத்தில் சிறந்து விளங்கும் மாநிலஅரசுக்கான விருதைப் பெற்ற மாநிலம் எது?

**விடை :தமிழ்நாடு**

**விளக்கம் :**

1. மத்தியசுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைசார்பில் புது தில்லியில் நடந்த 9 ஆவது இந்திய உடலுறுப்புதானதினவிழாவில்,உடலுறுப்புதானத்தில் சிறந்துவிளங்கியதற்காக தொடர்ந்து 4 ஆவது முறையாக தமிழ்நாட்டுக்கு மத்தியஅரசு விருது வழங்கியது. மூளைத்தண்டு இறப்புக்குகட்டாய சான்றிதழை அறிமுகம் செய்த இந்தியாவின் முதல் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. உடலுறுப்பு விநியோக சீராக்கல் மற்றும் பசுமைதாழ்வாரங்கள் அமைப்பது ஆகியவற்றிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

2. இந்தியாவின் முதல் திறந்தவெளி நூலகம் தொடங்கப்பட்டநகரம் எது?

**விடை :திருச்சி (தமிழ்நாடு)**

**விளக்கம் :**

- திருச்சி மாநகராட்சியானது விரைவில் இந்தியாவின் முதல் திறந்தவெளி நூலகமான ‘லிட்டில் ஃப்ரீ லைப்ரரியை’ புத்தூர் அலுவலர்கள் குடியிருப்பில் துவங்க இருக்கின்றது.
  - இது வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கவும் உள்ளூர் மக்களிடையே புத்தகங்களைப் பரிமாறிக் கொள்ளவும் எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
  - திருச்சி மாநகராட்சியானது ஏற்கெனவே ‘மகிழ்ச்சியின் சுவர்’ என்ற திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் போன்ற முன்னெடுப்புகளை செயல்படுத்தி இருக்கின்றது.

3. இந்தியாவில் முதன் முதலாகசெவிலியர் பட்டயப் பயிற்சியில் சேர்ந்த மூன்றாம் பாலித்தவர் யார்?

**விடை :S. தமிழ்செல்வி (வேலூர்)**

**விளக்கம் :**

- வேலூரைச் சேர்ந்த 22 வயதுடைய திருநங்கையான S. தமிழ்ச்செல்வி நாட்டில் செவிலியர் பட்டயப் பயிற்சியில் சேரும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த முதலாவது மாணவராகியுள்ளார்.
    - இவர் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர உள்ளார்.
    - இந்த முடிவானது மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் D. ஜெயச்சந்திரனின் பரிந்துரையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

4. சென்னைஉயர்நீதிமன்றத்தின் புதியநீதிபதியாகசமீபத்தில் நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை :பி. புகழேந்தி**

**விளக்கம் :**

- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக தமிழ்நாட்டின் கூடுதல் அட்வகேட் ஜெனரலான பி. புகழேந்தி நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.
- அனுமதி அளிக்கப்பட்ட மொத்த அளவான 75 என்ற எண்ணிக்கையில் இவரது நியமனத்தையும் சேர்த்து தற்போது உள்ள மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது.

5. தமிழகத்தை தாக்கிய“கஜா”புயலின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு மத்திய அரசு அனுப்பிய குழுவின் தலைவர்?

**விடை :E. டேனியல் ரிச்சர்ட்**

**விளக்கம் :**

- டேனியல் E. ரிச்சர்ட் தலைமையிலான அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவானது சமீபத்தில் கஜா புயலினால் ஏற்பட்ட அழிவுகளை மதிப்பிட்டு இருக்கின்றது.
- ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இந்த மத்தியக் குழுவானது தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளில் தனது மூன்று நாள் மதிப்பீட்டை நிறைவு செய்தது.
- டேனியல் ரிச்சர்ட் தற்போது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக உள்ளார்.
- இவரின் அறிக்கையானது அரசில் உள்ள தகுந்த குழுக்களின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும்.

6. முதன்முதலாக ஆசிரியரின் வருகையை பயோ-மெட்ரிக் முறையில் பதிவுசெய்யும் முறையை அறிமுகப்படுத்திய தமிழகபள்ளி எது?

**விடை :போரூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி**

**விளக்கம் :**

- தமிழ்நாடு அரசு, விரைவில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு பயோ மெட்ரிக் வருகைப் பதிவு முறையை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்த உள்ளது.
  - இது தொடர்பாக மாநில அரசானது அரசாணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
  - இதன் சோதனைத் திட்டமானது போரூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெரம்பலூர் அரசு பள்ளி ஆகியவற்றில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

7. இந்தியாவின் 57-வது கிராண்ட் மாஸ்டராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**விடை :கார்த்திகேயன் பாண்டியன் (தமிழ்நாடு)**

**விளக்கம் :**

- தமிழ்நாட்டின் கார்த்திகேயன் பாண்டியன் இந்தியாவில் 57வது கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார். செர்பியாவின் நோவி சாட் என்ற நகரில் நடைபெற்ற போட்டியில் கூட்டாக முதலிடத்தை வென்று இறுதிப் பட்டத்தை வென்றார்.

8. ‘தமிழ்நாடுலோக் ஆயுக்தா விதிகள் - 2018’வெளியிடப்பட்டுள்ள நாள்?

**விடை :நவம்பர் 29, 2018**

**விளக்கம் :**

- அரசியல்வாதிகள், அதிகாரிகள் மீதான ஊழல் புகாதை விசாரிக்கும் லோக் ஆயுக்தா அமைப்பதற்கான பணிகள் தமிழ்நாட்டில் தொடங்கி உள்ளது.
  - தமிழக அரசு சார்பில் **‘தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள் - 2018’** என்ற அரசாணை (நவம்பர் 29, 2018) வெளியிடப்பட்டுள்ளது.

- **லோக்பால் சட்டம் (2013) – குறிப்புகள்**
  - அரசியல்வாதிகள், எம்.பி., எம்.எல்.ஏ. உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் போன்றவர்கள் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி செய்யும்

குற்றங்கள் மற்றும் அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

- 2014ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி ஜனாதிபதி ஒப்புதலை பெற்றது. ஜனவரி 16ம் தேதி முதல் அமலுக்கு வந்தது.
- இந்த **'லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013'**-ன் 63வது பிரிவுப்படி, ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசமும் சட்டம் இயற்றி லோக்ஆயுக்தா நீதிமன்றத்தை அமைக்க வேண்டும்.

9. இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாடு 2019 ஜனவரி 23, 24 ஆம் தேதிகளில் நடைபெறும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

1. அண்மையில் "சௌரா ஜலநிதி" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?

**விடை : ஒடிசா**

**விளக்கம் :**

1. ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன பட்நாயக், அண்மையில் "சௌரா ஜலநிதி" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திவைத்தார். இது பாசனத்தில் விவசாயிகளுக்கு உதவுவதற்காக சூரிய ஆற்றல் பயன்பாட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. "சௌரா ஜலநிதி" என்பது அகழ் கிணறு அடிப்படையிலான சூரிய ஆற்றலில் இயங்கும் நீரிறைப்புப் பாசனமாகும்.

2. கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பின் கீழ் வரும் யூனியன் பிரதேசம் எது?

**விடை : அந்தமான் & நிக்கோபார் தீவுகள்**

**விளக்கம் :**

1. கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி தேபாசிஷ் கர் குப்தா பதவி ஏற்றார். இது இந்தியாவின் பழமையான உயர்நீதி மன்றமாகும். இதன் அதிகார வரம்பு மேற்கு வங்கம் மற்றும் யூனியன் பிரதேசமான அந்தமான் & நிக்கோபார் தீவுகளை உள்ளடக்கியது.

3. உலகின் மிகவுயரமான ‘ஒற்றுமை சிலை’ யை வடிவமைத்த இந்திய சிற்பி யார்?

**விடை : ராம் V சுதார்**

**விளக்கம் :**

1. சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாளன்று (அக்.31) குஜராத்தின் நர்மதா மாவட்டத்தில் பிரதமர் மோடி ‘ஒற்றுமை சிலை’ யை திறந்து வைத்தார். விடுதலை இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராக இருந்தவர் படேல், இந்திய விடுதலைக்கு முன்பாக 562 சமஸ்தானங்களையும் இணைத்து இந்தியக் குடியரசை உருவாக்கியவர் இவர். அதனால் தான் இது ‘ஒற்றுமை சிலை’ என்று அழைக்கப்படுகிறது. 182 மீ, உயரங்கொண்ட இந்தச்சிலை, உலகின் மிகவுயர சிலையாகும்.

4. செயல்பாட்டிலிருந்து நிறுத்தப்பட்ட எந்த விமானந்தாங்கிக் கப்பல், இந்தியாவின் முதல் கடல்சார் அருங்காட்சியகமாகவும், கடல்சார் சாகச மையமாகவும் மாற்றப்படவுள்ளது.

**விடை : ஐ என் எஸ் விராட்**

**விளக்கம் :**

1. ஓய்வுபெற்ற INS விராட் விமானந்தாங்கிக் கப்பலை, ஒரு மிதக்கும் கடல்சார் அருங்காட்சியகமாக மாற்றுவதற்கு அண்மையில் மகாராஷ்டிர அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இது நாட்டின் முதலாவது நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்ட கடல்சார் அருங்காட்சியகமாகவும், கடல்சார் சாகச மையமாகவும் இருக்கும். அரசு – தனியார் பங்களிப்புடன் ரூ.852 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. சிந்துதுர்க்கில் உள்ள நிவிதி பாறைகளில் மாலவன் கரையோரத்தில் இருந்து ஏழு கடல் மைல் தொலைவில் நங்கூரமிடப்பட்டு இக்கப்பல் நிறுத்தப்படும்.

5. எந்த மாநிலத்தில், ‘தர்மா கார்டியன் - 2018’ என்ற முதல் இந்திய-ஜப்பான் கூட்டு ராணுவப் பயிற்சி தொடங்கியுள்ளது?

**விடை : மிசோரம்**

**விளக்கம் :**

1. ‘தர்மா கார்டியன் - 2018’ என்ற முதலாவது இந்திய-ஜப்பான் கூட்டு ராணுவப்பயிற்சியானது மிசோரத்தின் வைரெங்தேவில் உள்ள கிளர்ச்சி எதிர்ப்பு போர்முறை பள்ளியில் தொடங்கியது. 14 நாள் நடைபெறும் இப்பயிற்சியின்போது, இரு நாட்டுப்படைகளிடையே இருக்கும் ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும். ஜப்பானியப் படைப்பிரிவானது தனது 32 ஆவது தரைப்படைப் பிரிவாலும் இந்தியா தனது 6/1 கூர்கா ரைபிள் அணியாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

6. ஒடிசாவின் ஜர்சுகுடா விமான நிலையம், அம்மாநிலத்தின் எந்த விடுதலைப் போராட்ட வீரரின் பெயர் கொண்டு மாற்றப்பட்டுள்ளது?

**விடை : சுரேந்திர சாய்**

**விளக்கம் :**

1. ஒடிசா மாநிலம் ஜர்சுகுடா விமான நிலையத்தை “வீர் சுரேந்திர சாய் விமான நிலையம், ஜர்சுகுடா” என்று பெயர் மாற்றம் செய்ய பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வீர் சுரேந்திர சாய் ஒடிசாவைச் சேர்ந்த விடுதலை போராட்ட வீரராவார். ஜர்சுகுடா விமான நிலையத்திற்கு இவரது பெயரை சூட்டுவது அவருக்கு செலுத்தும் தகுந்த அஞ்சலியாக இருக்கும்.

7. நவம்பர் 1 அன்று அதன் மாநில உதய தினத்தை கொண்டாடிய மாநிலங்கள் எவை?

**விடை : கேரளா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், ஹரியானா மற்றும் சத்தீஸ்கர்**

**விளக்கம் :**

1. கேரளா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், ஹரியானா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய ஐந்து மாநிலங்களும் அண்மையில் நவம்பர் 1 அன்று தங்களது மாநில உதய தினத்தை கொண்டாடியுள்ளன. கேரளாவில், மாநிலத்தின் 62ஆவது ஆண்டு

நிறைவை இந்நாள் குறிக்கிறது. 1956 ஆம் ஆண்டில் மொழியியல் கோட்பாடுகளுக்கு ஏற்ப, கேரளத்தின் நவீன எல்லைகள் உருவாகின. திருவிதாங்கூர் - கொச்சி மாநிலமானது மெட்ராஸ் மாநிலத்தின் மலபார் மாவட்டத்திலும், தெற்கு கனரா மாவட்டத்தில் உள்ள காசர்கோடு வட்டத்துடனும் இணைக்கப்பட்டது.

8. அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property) பற்றிய முதலாவது இந்திய – அமெரிக்க பேச்சுவார்த்தை சமீபத்தில் எந்த நகரத்தில் தொடங்கியது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property) மீதான இருதரப்பு உத்திசார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக அறிவுசார் சொத்துரிமை பற்றிய முதலாவது இந்திய – அமெரிக்க பேச்சுவார்த்தை சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது. அமெரிக்க தொழில்வர்த்தக சபையின் உலகளாவிய புத்தாக்க கொள்கை மையமும், அமெரிக்க - இந்திய வர்த்தக சபையுடன் இணைந்து FICCI –யும் இந்தப் பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளன.
2. ஆண்டுதோறும் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தை, புது தில்லி அல்லது வாசிங்டன் நகரத்தில் நடைபெறும். அமெரிக்க-இந்திய வர்த்தக சபையானது 1975 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

9. நடப்பாண்டு இந்திய சர்வதேச செர்ரிப்பூக்கள் திருவிழா நடைபெறவுள்ள நகரம் எது?

**விடை : ஷில்லாங்**

**விளக்கம் :**

1. மூன்றாவது இந்திய சர்வதேச செர்ரிப்பூக்கள் திருவிழாவானது நவம்பர் 14-17 ஷில்லாங்கில் நடைபெறவுள்ளது. இது உலகின் ஒரே இலையுதிர்கால செர்ரிப்பூக்கள் திருவிழா ஆகும். நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இந்த விழாவில், குழந்தைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், அரசு சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. உலகெங்கிலும் இருந்து ஒரு லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை இந்தத் திருவிழா ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10. அரசியலமைப்பின் எந்தப் பிரிவின் கீழ், குடியரசுத்தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கிறார்?

**விடை : பிரிவு 124**

**விளக்கம் :**

1. அரசியலமைப்பின் 124 ஆவது பிரிவின் கீழ், குடியரசுத்தலைவர் சமீபத்தில் நீதிபதிகள் ஹேமந்த் குப்தா, R. சுபாஷ் ரெட்டி, முகேஷ் குமார் ரசிக்பாய் ஷாஹ், அஜய் ரஸ்தோகி ஆகியோரை உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமனம் செய்துள்ளார். இவர்களுக்கு உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

11. ஆயுர்வேத மருத்துவத்தில் தொழில்முனைவு மற்றும் வர்த்தக மேம்பாடு குறித்த தேசிய கருத்தரங்கு நடைபெற்ற நகரம் எது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. ஆயுர்வேத மருத்துவத்தில் தொழில்முனைவு மற்றும் வர்த்தக மேம்பாடு குறித்த இரண்டு நாள் தேசிய கருத்தரங்கு புது தில்லியில் உள்ள Dr. அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நவம்பர் 4 அன்று தொடங்கியது. இதனை NITI ஆயோக் ஒத்துழைப்புடன் ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாட செய்துள்ளது.

12. அனைத்திந்திய "செயலி வழி முன்பதிவில்லாத பயணச்சீட்டு" பெறும் வசதியை (UTS on Mobile) இந்திய ரயில்வே CRIS உருவாக்கியுள்ளது. CRISஇன் தலைமையகம் எங்குள்ளது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. இந்திய ரயில்வே நிர்வாகம் அறிமுகப்படுத்தியுள்ள 'UTSONMOBILE' என்ற செயலி வாயிலாக முன் பதிவில்லா பயணச்சீட்டுகளை வாங்கிக்கொள்ளும் வசதி நவம்பர் 1 அன்று நாடு முழுவதும் அமலுக்கு வந்தது. பணமில்லா பரிவர்த்தனையை ஊக்கவிக்கும் விதமாகவும், காகிதப் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், பயணிகள் பயணச்சீட்டு வாங்குமிடத்தில் வரிசையில் நிற்பதை தவிர்க்கும் நோக்கத்திலும் இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

13. அண்மையில் எந்த நகரத்தில், 'லிட்டில் இந்தியா கேட்' திறக்கப்பட்டது?

**விடை : மேடான்**

**விளக்கம் :**

1. இந்தோனேசியாவின் 4 ஆவது பெரிய நகரமான மேடான் நகரத்தில் உள்ள மதராஸ் கிராமத்தில், 'Little India Gate' திறக்கப்பட்டுள்ளது. இது மேடான் நகரத்தின் வளர்ச்சியில் இந்திய சமூகத்தின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது. இந்தோனேசியாவுக்கான இந்திய தூதர் மற்றும் டிமோர் லெஸ்டி பிரதீப் குமார் ராவத் மற்றும் மேடான் நகரத் தந்தை H T சுல்மி எல்டின் S ஆகியோர் இணைந்து இந்தப் புதிய கட்டுமானத்தை திறந்து வைத்தனர்.

14. அண்மையில் எந்த நகரத்தில் "சிக்னேச்சர் பாலம்" என்ற இந்தியாவின் முதல் சமச்சீரற்ற வடங்கள் தாங்கு பாலம் திறந்துவைக்கப்பட்டது?

**விடை : தில்லி**

**விளக்கம் :**

1. யமுனையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள "சிக்னேச்சர் பாலம்" என்ற இந்தியாவின் முதல் சமச்சீரற்ற வடங்கள் தாங்கு பாலத்தை தில்லி முதல்வர் கெஜ்ரிவால் திறந்துவைத்தார். யமுனையின் மேற்கேயுள்ள வெளிவட்டச்சாலையும், கிழக்கே வாசிராபாத்தையும் இணைக்கும் வகையில் இது கட்டப்பட்டுள்ளது. வட & வடகிழக்கு தில்லிக்கு இடையிலான பயண நேரத்தை இது குறைக்கும்.

15. குடிமக்கள் சேவைகளுக்காக மின்னாளுகை திட்டமான 'CCTNS' ன் கீழ், எந்த மாநில காவல்துறைக்கு மத்திய அரசு விருது வழங்கியுள்ளது?

**விடை : அசாம்**

**விளக்கம் :**

1. குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள் (CCTNS) என்ற மின்னாளுகை திட்டத்தின் கீழ் 'நல்ல நடைமுறைகளுக்காக அசாம் காவல்துறைக்கு உள்துறை அமைச்சகம் விருது வழங்கியுள்ளது. CCTNSஐ பயன்படுத்தி தானியங்கி கடவுச்சீட்டு சரிபார்ப்பு மற்றும் நிரந்தர

குடியிருப்பு சான்றிதழ் சேவை போன்ற குடிமக்கள் மையப்படுத்தப்பட்ட சேவை வழங்கலுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

16. எந்தெந்த பயிர்களுக்கு பசுமை செயல்திட்டம் (Operation Greens) அமல்படுத்துவதற்கான நெறிமுறை உத்திகளுக்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது?

**விடை : தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு**

**விளக்கம் :**

1. உணவு பதப்படுத்துதல் தொழில் அமைச்சகமானது பசுமை செயல்திட்டம் அமல்படுத்துவதற்கான நெறிமுறை உத்திகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. பசுமை செயல்திட்டம், 2018 – 19 வரவு செலவின்போது, ரூ.500 கோடி ஒதுக்கீட்டுடன் அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும், அனைத்து காலங்களிலும் TOP பயிர்கள் என அழைக்கப்படும் தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவை விலை ஏற்றத்தாழ்வின்றி கிடைப்பதை உறுதிசெய்வதே இதன் நோக்கமாகும்.

17. எந்த மாநிலத்திற்கு தனி உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு உச்சநீதிமன்றம் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது?

**விடை : ஆந்திரப்பிரதேசம்**

**விளக்கம் :**

1. ஆந்திர மாநிலத்திற்கு தனி உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு உச்சநீதிமன்றம் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது. நாட்டின் 25 ஆவது உயர்நீதிமன்றமான இது வரும் 2019 ஜன.1 முதல் செயல்பாட்டுக்கு வரும் அமராவதியில் அமைக்கப்படும் நீதி நகரத்தில் நிரந்தரமாக புதிய கட்டடம் கட்டப்படும் வரையில், இது தற்காலிக கட்டடத்தில் செயல்படும்.

2. ஒருங்கிணைந்த ஆந்திரத்திலிருந்து தெலுங்கானா பகுதி பிரிக்கப்பட்டு தனி மாநிலமாக கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உருவாக்கப்பட்டது. இதையடுத்து, தெலுங்கானா தலைநகரான ஹைதராபாத்தில் இருக்கும் உயர்நீதிமன்றமே, ஆந்திரப்பிரதேசத்துக்கும், தெலுங்கானாவுக்கும் பொதுவானதாக செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஹைதராபாத்

உயர்நீதிமன்றம் அடுத்த ஆண்டு முதல் தெலுங்கானா உயர்நீதிமன்றம் என்று அழைக்கப்படும்.

18. தொழில்நுட்பங்கள் அடிப்படையிலான மற்றும் குடிமக்கள் தோழமைமிகு 'மோ பேருந்து' சேவையை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை : ஒடிசா**

**விளக்கம் :**

1. இலவச Wi-Fi, CCTV கண்காணிப்பு, பொதுத்தகவல் காட்சியமைப்பு & நிறுத்தங்கள் அறிவிப்பு உள்ளிட்ட தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் குடிமக்கள் தோழமைமிகு 'மோ பேருந்து' சேவையை அண்மையில் ஒடிசா மாநில அரசாங்கம் புவனேசுவரில் தொடங்கிவைத்தது. மாநில அரசுக்கு சொந்தமான தலைநகர நகர்ப்புற போக்குவரத்துக் கழகத்தின் 'நகரப் பேருந்து நவீனமயமாக்கல்' திட்டத்தின் ஒருபகுதியாக இந்தச் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

19. ஆந்திரப்பிரதேச சீரமைப்புச் சட்டம் 2014 இன் எந்தப் பிரிவின் கீழ், அம்மாநிலத்தில் மத்திய பழங்குடி பல்கலைக்கழகம் அமைக்கப்படவுள்ளது?

**விடை : 13 ஆவது**

**விளக்கம் :**

1. 2014 ஆம் ஆண்டின் ஆந்திரப்பிரதேச சீரமைப்பு சட்டத்தின் 13 ஆவது பிரிவின் கீழ் விஜயநகரம் மாவட்டத்தில் உள்ள ரெல்லி கிராமத்தில் "ஆந்திரப்பிரதேச பழங்குடிகள் மத்திய பல்கலைக்கழகம்" ஒன்றை நிறுவுவதற்கான ஒப்புதலை மத்திய அமைச்சரவை வழங்கியுள்ளது. இந்தப் பழங்குடிகளுக்கான மத்திய பல்கலையை நிறுவுவதற்கான முதற்கட்ட செலவுகளுக்காக ரூ.420 கோடியை ஒதுக்கீடு செய்யவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

20. இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே 25 ஆவது "SIMBEX – 18" என்ற கடல்சார் பயிற்சி தொடங்கியுள்ளது?

**விடை : சிங்கப்பூர்**

**விளக்கம் :**

1. இந்தியாவிற்கும், சிங்கப்பூர் குடியரசின் கடற்படைக்கும் இடையே நவம்பர் 10 முதல் 21 வரை நடக்கும் 25 ஆவது "SIMBEX – 18" என்ற கடல்சார் பயிற்சியானது, வங்காள விரிகுடாவில் உள்ள அந்தமான் கடலில் தொடங்கியுள்ளது. 1994 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வரும் இந்தப் பயிற்சியில், 'SIMBEX – 18' தான் அளவு மற்றும் கடுமையின் அடிப்படையில் மிகப்பெரியதாகும்.

21. எந்த நாட்டில், தீர்வுகளை மையமாக்ககொண்ட முதல் ''உலகளாவிய குளுமை புத்தாக்க மாநாடு – Global Cooling Innovation Summit" நடைபெறவுள்ளது?

**விடை : இந்தியா**

**விளக்கம் :**

1. தீர்வுகளை மையமாகக்கொண்ட முதல் உலகளாவிய குளுமை புத்தாக்க மாநாட்டை'' வரும் நவம்பர் 12 அன்று புது தில்லியில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன் தொடங்கிவைக்கவுள்ளார். காலநிலை பற்றிய பல்வேறு அச்சுறுத்தல்கள் குறித்து உலக நாடுகளின் தலைவர்கள் இதில் விவாதிக்கவுள்ளனர்.

22. 500 கி.கி, திறன்கொண்ட எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய சூரிய ஆற்றலில் இயங்கும் குளிர்பதன சேமிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ள ஐஐடி எது?

**விடை : ஐஐடி மெட்ராஸ்**

**விளக்கம் :**

1. பழங்கள், காய்கறிகள் மற்றும் இன்னபிற விளைபொருள்களை சேமித்து வைப்பதற்காக 500 கி.கி., சேமிப்புத்திறன்கொண்ட எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய சூரிய ஆற்றலில் இயங்கும் குளிர்பதன சேமிப்பு சாதனத்தை மெட்ராஸ் ஐஐடி உருவாக்கியுள்ளது. இச்சாதனம், விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை போதுமான சேமித்து வைக்க உதவுகிறது. அது அவை விற்கப்படுவதற்கு முன்பே கெட்டுப்போவதிலிருந்து அவற்றை பாதுகாக்கிறது.

23. பொது நலவாழ்வுக்கான யோகா குறித்த சர்வதேச மாநாடு நடைபெறும் இடம் நகரம் எது?

**விடை** : பனாஜி

**விளக்கம் :**

1. நவம்பர் 12 அன்று பனாஜியில் உள்ள கலா அகாடமியில் பொத நலவாழ்வுக்கான யோகா குறித்த சர்வதேச மாநாடு தொடங்கியது. 2 நாள் நடைபெறும் இம்மாநாட்டை மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இம்மாநாட்டின் கருப்பொருள், "**Yoga for Public Health**" என்பதாகும். சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த 1000 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

24. "Jashn-e-Virasat-e-Urdu" விழாவை கொண்டாடும் மாநில அரசு எது?

**விடை : தில்லி**

**விளக்கம் :**

1. ஆறு நாள் நடைபெறும் **"Jashn-e-Virasat-e-Urdu"** என்ற விழாவை கன்னாட் பிளேசில் உள்ள சென்ட்ரல் பூங்காவில் தில்லி அரசாங்கம் கொண்டாடுகிறது. உருது கலாச்சாரம் மற்றும் அதன் பாரம்பரியத்தை ஊக்குவிப்பதும், பாதுகாப்பதுமே இதன் நோக்கமாகும். பல்வேறு உருது பாரம்பரிய நிகழ்வுகள் இவ்விழாவில் இடம்பெறும் நவம்பர் 15 அன்று இவ்விழா நிறைவுறும்.

25. தேசியப் பொருளாதார ஆராய்ச்சி செயலகத்தின் (NBER) அண்மைய ஆய்வறிக்கையின்படி, இந்தியாவின் மிகவும் நெரிசலான நகரம் எது?

**விடை : பெங்களூரு**

**விளக்கம் :**

1. அமெரிக்காவைச் சேர்ந்த தேசியப் பொருளாதார ஆராய்ச்சி செயலகமானது அண்மையில் "நகர்ப்புற இந்தியாவில் இடம் பெயராற்றல் மற்றும் நெரிசல்" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டது. இதில், இந்தியாவின் மிகவும் நெரிசலான நகரமாக பெங்களூரு உள்ளது. அதைத் தொடர்ந்து மும்பை, தில்லி, சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத் மற்றும் புனே ஆகிய நகரங்கள் உள்ளன.

26. உயர்கல்வி ஆசிரியர்களுக்கான ‘LEAP’ என்ற திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கியுள்ளது. இதில் ‘LEAP’ என்றால் என்ன?

**விடை : Leadership for Academicians Programme**

**விளக்கம் :**

1. நவம்பர் 13 அன்று புது தில்லியில் உயர்கல்வி ஆசிரியர்களுக்கான Leadership for Academicians Programme (LEAP) என்ற திட்டத்தையும், Annual Refresher Programme In Teaching (ARPIT) என்ற திட்டத்தையும் மனிதவள மேம்பாட்டு இணையமைச்சர் Dr. சத்யபால் சிங் தொடங்கிவைத்தார். MOOC இன் தளமான SWAYAM பயன்படுத்தி 15 லட்சம் உயர்கல்வி ஆசிரியர்களுக்கு இணைய வழியில் தொழிற்முறை பயிற்சி வழங்குவதற்கான ஒரு தனித்தன்மையான திட்டந்தான் ARPIT.

27. இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையே முதலாவது இருதரப்பு கடற்படைப்பயிற்சியான ‘சமுத்திர சக்தி – 2018’ தொடங்கியுள்ளது?

**விடை : இந்தோனேசியா**

**விளக்கம் :**

1. நவம்பர் 12-18 வரை இந்தோனேசியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெறும் ‘சமுத்திய சக்தி – 2018’ என்ற முதலாவது இருதரப்பு கடற்படைப்பயிற்சியானது இந்தோனேசியாவில் உள்ள சுராபாயா துறைமுகத்தில் தொடங்கியது. இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதும், கடல்சார் ஒத்துழைப்பை விரிவுப்படுத்துவதும், செயல்படுந்தன்மையை மேம்படுத்துவதும், மிகச்சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொள்வதும் இந்தப் பயிற்சியின் நோக்கங்களாகும்.
2. இந்தியக் கடற்படை சார்பாக கிழக்குக்கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் விசாகப்பட்டினத்தில் உள்ள கிழக்குக்கடற்படையின் INS ராணா என்ற கப்பல் இதில் பங்கேற்றுள்ளது.

28. 2019 பொதுத்தேர்தலில் இளையோரின் ஈடுபாட்டை அதிகரிக்க டுவிட்டர் இந்தியா எந்த சமூக முன்முயற்சியை மேற்கொண்டுள்ளது?

**விடை : #PowerOf18**

**விளக்கம் :**

1. வரும் 2019 பொதுத்தேர்தலில் இளையோரின் ஈடுபாட்டை அதிகப்படுத்துவதற்காக டுவிட்டர் #PowerOf18 என்ற ஹேஷ்டேக்கை அமைத்து விழிப்புணர்வை மேற்கொண்டுள்ளது. இதனை டுவிட்டர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (CEO) ஜாக் டோர்சி மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் துணைத்தலைவர் மாயா ஹரி ஆகியோர் தில்லி ஐஐடியில் நடந்த ஒரு நிகழ்வின் போது அறிமுகம் செய்துவைத்தனர். இந்தப் பரப்புரை வரவிருக்கும் தேர்தல்களில் இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிப்பதற்கு தூண்டுவதாக அமையும்.

29. பப்புவா நியூ கினியாவில் உள்ள கிலுவே மலையில் ஏறிய முதல் இந்தியர் யார்?

**விடை : சத்யரூப் சித்தந்தா**

**விளக்கம் :**

1. பப்புவா நியூ கினியாவில் உள்ள 2ஆவது உயர்ந்த மலையான கிலுவே மலையில் ஏறிய முதல் இந்தியராக, வங்காளத்தை சேர்ந்த இந்திய மலையேற்ற வீரர் சத்யரூப் சித்தந்தா மாறியுள்ளார். 4367 மீ, உயரங்கொண்ட இம்மலையின் உச்சியை நவம்பர் 11 அன்று அவர் அடைந்தார். இதன்மூலம் 7 எரிமலை உச்சிகளில் ஐந்தினை அவர் அடைந்துள்ளார்.

2. இன்னும் ஒரு சில நாட்களில் பப்புவா புதிய கினியாவின் மிகவுயர்ந்த மலையான வில்ஹெம் மலையை அவர் ஏறவுள்ளார். இதில் அவர் வெற்றிபெற்றால் இவ்விரு மலைகளின் உச்சியை அடைந்த முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

30. அண்மையில் இந்தியாவின் எந்தக் கச்சா எண்ணெய் சேமிப்புக் கிடங்கு வசதியை அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது?

**விடை : பாடூர்**

**விளக்கம் :**

1. கர்நாடாக மாநிலம் உடுப்பி மாவட்டத்தில் உள்ள பாடூர் நிலத்தடி சேமிப்பு வசதி (2.5 மில்லியன் டன் - 17 மில்லியன் பீப்பாய்கள்) கொண்ட கச்சா எண்ணெய் சேமிப்புக்கிடங்கை, குத்தகை விடுவது தொடர்பான ஒப்பந்தம்

அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்துக்கும் (ADNOC) இந்திய பெட்ரோல் சேமிப்பு நிறுவனத்துக்கும் (ISPRL) இடையே கையெழுத்தானது.

31. 38ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் (IITF – 2018) பங்குதாரர் நாடு எது?

**விடை : ஆப்கானிஸ்தான்**

**விளக்கம் :**

1. 38ஆவது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி (IITF-2018) தில்லி பிரகதி மைதானத்தில் நவம்பர் 14 அன்று தொடங்கியது. ஆண்டுதோறும் 14 நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சி வரும் நவம்பர் 27 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்த ஆண்டு இந்தியாவில் உள்ள கிராமப்புற நிறுவனங்கள் (Rural Enterprises in India) எனும் கருப்பொருளில் இக்கண்காட்சி நடைபெறுகிறது. நவ.18 முதல் 27 ஆம் தேதி வரை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு இக்கண்காட்சி திறக்கப்படும்.

32. எந்த ஆற்றின் மீது இந்தியாவின் முதல் பல்வகை முனையம் திறக்கப்பட்டுள்ளது?

**விடை : கங்கை**

**விளக்கம் :**

1. நவ.11 அன்று, பிரதமர் மோடி, வாரணாசியில் உள்ள அவரது நாடாளுமன்ற தொகுதியிலிருந்து கங்கையாற்றில் புதிதாகக் கட்டப்பட்ட இந்தியாவின் முதல் பல்வகை முனையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார். கொல்கத்தாவிலிருந்து வந்த முதல் சரக்குக் கப்பலையும் அப்போது பிரதமர் வரவேற்றார். 'ஜல்மார்க் விகாஸ்' திட்டத்தின் ஓர் அங்கமாக, இந்த முனையம் கட்டப்பட்டுள்ளது.

2. தேசிய நீர்வழித் திட்டம் 1 இன் கீழ் (கங்கையாறு) மொத்தம் 4 சரக்கு போக்குவரத்து முனையங்கள் அமைக்கப்பட உள்ளன. தற்போது முதல் முனையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஹால்தியா-வாரணாசி இடையிலான தேசிய நீர்வழிப்பாதை 1ஐ மேம்படுத்த உலக வங்கியின் உதவி பெறப்பட்டது. தொழில்நுட்ப உதவி மற்றும் முதலீடும் உலக வங்கியிடமிருந்து திரட்டப்பட்டது.

33. நடப்பாண்டு உலகளாவிய டிஜிட்டல் உள்ளடக்க சந்தை மாநாட்டை நடத்தும் நாடு எது?

**விடை : இந்தியா**

**விளக்கம் :**

1. ஆசிய பசிபிக் பிராந்தியங்களில் சிறப்பு கவனம் கொண்டு நவம்பர் 16 அன்று புது தில்லியில் இரண்டாவது உலகளாவிய டிஜிட்டல் உள்ளடக்க சந்தை (Global Digital Content Market – GDCM) தொடங்கவுள்ளது. 2 நாள் நடைபெறும் இம்மாநாட்டில் இசை, திரைப்படம், ஒலிபரப்பு மற்றும் வெளியீடு அத்துடன் கூட்டு மேலாண்மை, வளர்ந்துவரும் மாதிரிகள் மற்றும் சந்தை & கொள்கை உருவாக்குநர்களின் தாக்கங்கள் ஆகியவற்றில் அமர்வுகள் இடம்பெறும்.

2. இதனை மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழியங்கும் தொழிற்துறை கொள்கை மற்றும் ஊக்குவிப்புத்துறை ஏற்பாடு செய்துள்ளது. திரைப்படங்கள், இசை மற்றும் ஊடகங்களில் வலுவாகவுள்ள காரணத்தினால் உலக அறிவுசார் சொத்து நிறுவனமானது, இந்த மாநாட்டை நடத்த இந்தியாவை தேர்ந்தெடுத்துள்ளது.

34. உலக சுங்க அமைப்பின் பிராந்திய கூட்டம் நடைபெறும் இந்திய நகரம் எது?

**விடை : ஜெய்ப்பூர்**

**விளக்கம் :**

1. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில், ஆசியாவின் 33 உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடன் உலக சுங்க அமைப்பின் பிராந்திய கூட்டம் தொடங்கியது. திறனை கட்டமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் சுங்க சீர்திருத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டது. திருத்தப்பட்ட கியோட்டோ நெறிமுறை, மின்னணு சுங்கங்கள், மின்னணு வர்த்தகம் ஆகியவை பற்றியும் பங்கேற்பாளர்கள் விவாதித்தனர்.

35. 9ஆவது துடிப்புமிக்க குஜராத் உச்சிமாநாடு 2019ல் பங்குதாரர் நாடு எது?

**விடை : ஐக்கிய அரபு நாடுகள்**

**விளக்கம் :**

1. ‘Shaping of a New India’ என்ற கருப்பொருளுடன் வரும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 18-20 வரை குஜராத் மாநிலம் காந்திநகரில் ஒன்பதாவது துடிப்புமிக்க குஜராத் உலகளாவிய உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. புதிய இந்தியாவுக்கான பொருளாதார வளர்ச்சிகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும். தொடர்ந்து இரண்டாவது முறையாக ஐக்கிய அரபு நாடுகள் பங்குதாரர் நாடாக இதில் பங்கேற்கவுள்ளது.

36. எந்த நகரத்தில், மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றத்தின் தலைமை அமர்வு அமைந்துள்ளது?

**விடை : ஜபல்பூர்**

**விளக்கம் :**

1. அண்மையில் நீதிபதி சஞ்சய் குமார் சேத் ஆளுநர் மாளிகையில் மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றத்தின் 24 ஆவது தலைமை நீதிபதியாக பதவியேற்றார். அம்மாநிலத்தின் ஆளுநர் ஆனந்தி பென் படேல் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சஞ்சங் குமார், 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஓய்வு பெறுவார். இந்த உயர்நீதிமன்றத்தின் தலைமை அமர்வு ஜபல்பூரில் அமைந்துள்ளது.

37. தனது பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ‘Nipun’ என்ற மின்னணு வழி கற்றல் (e-learning) தளத்தை தொடங்கியுள்ள மாநில காவல்துறை எது?

**விடை : தில்லி காவல்துறை**

**விளக்கம் :**

1. தில்லி காவல்துறை அண்மையில் தனது பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ‘Nipun’ என்ற மின்னணு வழி கற்றல் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்ட சிறப்புப் படிப்புகள் மூலம் இணையவழி பயிற்சி மற்றும் தகவல்களை வழங்குவதே இதன் நோக்கமாகும். பெருவாரியான படிப்புகள் அம்மாநில காவல்துறையாலும், சில படிப்புகள் பல்கலைக்கழக மானியக்குழு, FICCI, NHRC, NCPCR மற்றும் ஜானகி

தேவி நினைவுக்கல்லூரி, தில்லி பல்கலையின் CLAP திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளன.

38. இந்தியாவின் 2019 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில், சிறப்பு விருந்தினராக பங்கேற்கவுள்ளவர் யார்?

**விடை: சிரில் ராமபோசா**

**விளக்கம் :**

1. அடுத்த ஆண்டு தில்லியில் நடைபெறும் இந்தியாவின் குடியரசு தின விழாவில், தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா சிறப்பு விருந்தினராக பங்கேற்கவுள்ளார். இதன்மூலம், ராமபோசா தனது நாட்டிலிருந்து இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் இரண்டாவது தலைவராக மாறியுள்ளார். முன்னாள் அதிபர் நெல்சன் மண்டலோ 1995 ஆம் ஆண்டின் குடியரசு அணிவகுப்பில் முதன்மை விருந்தினராக பங்கேற்றார்.

2. 2017 டிசம்பரில் ஜேக்கப் ஜூமா தனது பதவியை ராஜினாமா செய்தபிறகு, தென்னாப்பிரிக்காவின் 5 ஆவது அதிபராக நிறவெறிக்கு எதிரான தீவிர செயற்பாட்டாளர் ராமபோசா பதவியேற்றார்.

39. நகர்ப்புற உட்கட்டமைப்பு என்ற தலைப்பில் நடப்பாண்டு தெற்காசிய மண்டல மாநாடு நடந்த நகரம் எது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. நவ.15 – 16 ஆகிய தேதிகளில், "Urban Infrastructure : New Approaches to Public & Private Partnerships and Municipal Finance Innovations" என்ற தலைப்பில் தெற்காசிய பிராந்திய மாநாடு, புது தில்லியில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் மையத்தில் நடைபெற்றது.

40. தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் (NCDC) தலைமையகம் எங்குள்ளது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. கூட்டுறவு நிறுவனங்களை ஊக்குவிக்கவும், அவற்றுக்கு நிதியுதவி வழங்கவும் அமைக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான அமைப்பே தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக்

கழகமாகும். அதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் அண்மையில், கூட்டுறவு வணிக முயற்சிகளை நோக்கி இளையோர்களை ஈர்ப்பதற்காக, 'யுவ – சஹாகர் - கூட்டுறவு தொழில் ஆதரவு மற்றும் புத்தாக்க திட்டம்' ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

2. இதனை மத்திய விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம் NCDC ஆல் உருவாக்கப்பட்ட ஆயிரம் கோடி மதிப்பிலான 'கூட்டுறவு துளிர் நிறுவனம் மற்றும் புத்தாக்க நிதியத்துடன்' இணைக்கப்படும்.

41. பால் பண்ணை விவசாயிகளுக்காக 'கோ சம்ரிதி பிளஸ்' என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை : கேரளா**

**விளக்கம் :**

1. கேரள மாநிலத்தில் பால் பண்ணை விவசாயிகளுக்கு காப்பீடு வழங்குவதற்காக கேரள முதல்வர் பினராயி விஜயன் சமீபத்தில், 'கோ சம்ரிதி பிளஸ் திட்டம்' ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். அரசின் இந்த மானியத்திட்டமானது குறைவான காப்புப்டி விகிதத்தில் பால் விவசாயிகளுக்கு காப்பீடு வழங்குகிறது. பொதுப் பிரிவினரை சேர்ந்த விவசாயிகளுக்கு காப்புப்படியில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். அதே போல் SC/ST பிரிவினரை சேர்ந்த விவசாயிகளுக்கு காப்புப்படியில் 70% மானியம் வழங்கப்படும்.

42. யானைகளுக்கான இந்தியாவின் முதல் சிறப்பு மருத்துவமனை திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

**விடை : மதுரா**

**விளக்கம் :**

1. உ.பி. மாநிலத்தின் மதுரா அருகேயுள்ள சுர்முரா கிராமத்தில் 'Wildlife SOS' என்ற அரசு சாரா அமைப்பு உ.பி. மாநில வனத்துறையுடன் இணைந்து யானைகளுக்கான இந்தியாவின் முதல் சிறப்பு மருத்துவமனையை திறந்துள்ளது.

2. யானைகளுக்கான மேவல் (Scan), X-கதிர், LASER சிகிச்சை, பல் X-கதிர், மீயொலி வரைபடம் (Ultrasonography) போன்ற அதிநவீன வசதிகளுடன் இம்மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது. யானைகள் பாதுகாப்பு மையத்தின் அருகே இம்மருத்துவமனை அமைந்துள்ளது. யானைகளுக்கு அடிபட்டாலோ அல்லது நீண்டநாள் சிகிச்சை அளிக்கவும் இந்த மருத்துவமனை உதவுகிறது.

43. 26 ஆவது மத்திய மற்றும் மாநில அமைப்புகள் (COCSSO) மாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை : Quality Assurance in Official Statistics**

**விளக்கம் :**

1. மத்திய மற்றும் மாநில புள்ளிவிவர அமைப்புகளின் 26 ஆவது (COCSSO) மாநாடு, நவ.15-16 ஆகிய தேதிகளில் "அலுவல்பூர்வ புள்ளிவிவரங்களில் தர உறுதி" என்ற தலைப்பில் ஹிமாச்சலப் பிரதேசத்தின் தர்மசாலாவில் நடைபெற்றது.
2. இதனை ஹிமாச்சலப்பிரதேச மாநில அரசு, பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்குநரகம் ஆகியவற்றுடன் இணைந்து புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது. ஆண்டுதோறும் நடந்தேறும் இம்மாநாடு, மத்திய & மாநில புள்ளியியலாளர்கள் இடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும், புள்ளியியல் நடவடிக்கைகள் சார்ந்த பொதுவான பிரச்சனைகள் குறித்து கலந்தாலோசிக்கவும் உதவுகிறது.

44. காவல்துறையில் பணியாற்றும் பெண்களின் 8ஆவது தேசிய மாநாடு நடைபெறும் நகரம் எது?

**விடை : ராஞ்சி**

**விளக்கம் :**

1. காவல்துறையில் பணியாற்றும் பெண்களின் 8 ஆவது தேசிய மாநாடு, ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நவ.19 அன்று தொடங்கியது. காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, ஜார்க்கண்ட் மாநில காவல்துறையுடன் இணைந்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

2. காவல்துறையில் பணியாற்றும் பெண்களின் பணித்திறமையை அதிகரிப்பது மற்றும் குறைப்பது தொடர்பான சூழலை உருவாக்குவது பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது. உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி கியான்சுதா மிஸ்ரா, தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா உள்ளிட்ட பேச்சாளர்கள் இம்மாநாட்டில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

45. மகாராஷ்டிர அரசாங்கம் சமீபத்தில் 'சமூகம் மற்றும் கல்வி ரீதியலான பிற்படுத்தப்பட்ட வகுப்பு – Socially and Educationally Backward Class' என்றழைக்கப்படும் ஒரு புதிய பிரிவில் எந்த சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது?

**விடை : மராத்தா**

**விளக்கம்**

1. மகாராஷ்டிர அரசாங்கம் சமீபத்தில் 'சமூகம் மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட வகுப்பு' என்று அழைக்கப்படும் ஒரு புதிய பிரிவில் மராத்தா சமுதாயத்திற்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது. எனவே, மராத்தாகள் சுயாதீன ஒதுக்கீட்டில் இருந்து ஒதுக்கீடு பெறுவார்கள் மற்றும் இது பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீட்டைப் பாதிக்காது.

46. குஜராத் மற்றும் மகாராஷ்டிரத்துக்குப் பின் ஹுக்கா மையங்களை சட்டப்பூர்வமாக தடை செய்துள்ள மாநில அரசு எது?

**விடை : பஞ்சாப்**

**விளக்கம் :**

1. மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு ஹுக்கா மையங்களை சட்டப் பூர்வமாக தடைசெய்துள்ள இந்தியாவின் 3ஆவது மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது. சிகரெட், இதர புகையிலை பொருட்கள் சட்ட திருத்த மசோதாவிற்கு (விளம்பரத் தடை மற்றும் வர்த்தக ஒழுங்குமுறை) (பஞ்சாப் சட்ட திருத்தம்) 2018, குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, பஞ்சாப் மாநிலத்தில் ஹுக்கா விடுதிகள் / மையங்களுக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

47. எந்த நகரத்தில், "INDRA-2018" என்ற இந்தோ-ரஷ்ய கூட்டு பயிற்சி தொடங்கியுள்ளது?

**விடை : ஜான்சி**

**விளக்கம் :**

1. கிளர்ச்சிகளை முறியடிப்பதற்காக ஐ.நா. ஆதரவுடன் இந்தியா – ரஷ்யா இடையே கூட்டு ராணுவப் பயிற்சி INDRA – 2018 உத்தரப்பிரதேச மாநிலம் பாபினா ராணுவ முகாமில் உள்ள பாபினா துப்பாக்கிச் சுடும் பயிற்சித்திடலில் நவ.18 அன்று தொடங்கியது. ரஷ்யக் கூட்டமைப்பின் 5 ஆவது ராணுவ படைப்பிரிவுகளும், இந்தியக் குடியரசின் ஆயுதம் தாங்கிய காலாட்படைப் பிரிவும், இந்த 11 நாள் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

48. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் ஸ்ரீ விஸ்வகர்மா திறன் மேம்பாட்டு பல்கலை அமையவுள்ளது?

**விடை : ஹரியானா**

**விளக்கம் :**

1. ஹரியானாவின் பல்வால் மாவட்டத்தில் உள்ள துத்ஹோலா கிராமத்தில் இந்தியாவின் முதல் ஸ்ரீ விஸ்வகர்மா திறன் மேம்பாட்டு பல்கலைக்கு, பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். 82.7 ஏக்கர் பரப்பளவில், ரூ.1000 கோடி செலவில் இந்தப் பல்கலைக்கழகம் கட்டப்படவுள்ளது. மேலும், KMP எனப்படும் குண்ட்லி – மானேசர் - பல்வால் (Kundli-Manesar-Palwal) அதிவிரைவு சாலையில் மேற்குப்புற அதிவிரைவு சாலையையும், அப்போது பிரதமர் திறந்து வைத்தார்.

49. 'KOOL' என்ற திறந்தநிலை இணையவழி கற்றல் திட்டத்தை தொடங்கிய மாநில அரசு எது?

**விடை : கேரளா**

**விளக்கம் :**

1. கேரள மாநிலத்தில் கல்வி முறையை முழுவதும் 'டிஜிட்டல்' மயமாக்கும் முயற்சியாக, 'KITE' எனப்படும் கேரள கல்வியியல் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப அமைப்பானது 'KOOL' எனப்படும் இணையவழி திறந்தநிலை கல்வி

பயிற்சி திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. ‘KOOL’ ஆனது MOOC (Massive Open Online Course) மாதிரியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

50. அண்மையில் நாரி ஷஷக்திகரன் சங்கல்ப் அபியானை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை : உத்தரப்பிரதேசம்**

**விளக்கம் :**

1. நவ.20 அன்று, உ.பி. மாநிலம் லக்னோ நகரத்தில் அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யாத் நாரி ஷஷக்திகரன் சங்கல்ப் அபியான் (பெண்கள் அதிகாரமளித்தல் பரப்புரை) என்ற ஒன்றை அறிமுகப்படுத்தி வைத்தார். ஒரு மாத காலம் நீளும் இந்தப் பரப்புரை, பல்வேறு திட்டங்களுடன் மாநிலத்தின் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் சமயம், மாநில அரசில் பணியாற்றும் பெண் ஊழியர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று வீடு வீடாக பரப்புரை மேற்கொள்வார்கள்.

51. 7 ஆவது சர்வதேச சுற்றுலா சந்தையை நடத்தவுள்ள இந்திய வடகிழக்கு மாநிலம் எது?

**விடை : திரிபுரா**

**விளக்கம் :**

1. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்காக நவ.22 முதல் அகர்தலாவில் சர்வதேச சுற்றுலா சந்தையின் 7 ஆவது பதிப்பை திரிபுரா மாநிலம் நடத்தவுள்ளது. ரூ.260 கோடி மதிப்பில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது. இதற்கான செலவை மத்திய சுற்றுலா அமைச்சகம் வழங்கும்.

52. எந்த IIT யை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பங்களில் LPG விநியோகத்தை அதிகரிப்பதற்கான ஒரு தீர்மான ஆதரவு அமைப்பை (Decision Support System) உருவாக்கியுள்ளனர்?

**விடை : ஐஐடி கரக்பூர்**

**விளக்கம் :**

1. கரக்பூர் IIT சேர்ந்த, ஆராய்ச்சியாளர்கள், 'பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தில்' உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களில் LPG இணைப்புகளை அதிகரிக்க உதவுவதற்காக ஒரு தீர்மான ஆதரவு அமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்தத் தீர்மான ஆதரவு அமைப்பு என்பது கணித நிரலாக்கம் மற்றும் செயல்பாட்டு ஆராய்ச்சி நுட்பங்களைப் பயன்படுத்தி அறிவார்ந்த தீர்மானங்களை எடுக்க உதவும் ஒரு கணினி நிரலாகும்.

53. "ஜஷ்னே பச்பான் - 2018" என்ற குழந்தைகளுக்கான சர்வதேச நாடக விழாவின் 14ஆவது பதிப்பு, எந்த நகரத்தில் தொடங்கியுள்ளது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. "ஜஷ்னே பச்பான் - 2018" என்ற குழந்தைகளுக்கான சர்வதேச நாடக விழாவின் 14 ஆவது பதிப்பு, புது தில்லியில் நவ.17 அன்று தொடங்கியது. இது நாடகத்திற்கான தேசிய கல்வி நிறுவனத்தின் Theatre in Education (TIE) நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. இது சன்ஸ்கார் ரங் டோலி என்றும் அழைக்கப்படுகிறது. சிறுவர்களுக்கான இந்த 9-நாள் நாடகத் திருவிழாவில் இந்தியாவிலிருந்து 21 தயாரிப்பு நிறுவனங்களும், இலங்கை (பேச்சு சாரா), சுவிட்சர்லாந்து (ஆங்கிலம்) மற்றும் இந்தோனேசியா (ஜாவனீஸ்) உள்ளிட்ட மூன்று வெளிநாட்டு நிறுவனங்களும் பங்கேற்கின்றன.

54. எந்த நகரத்தில், இந்தோ-ஜப்பான் வர்த்தக சபையின் முதல் வணிக விழா நடத்தப்பட்டது?

**விடை : புனே**

**விளக்கம் :**

1. இந்தோ-ஜப்பான் வர்த்தக சபையின் "கொனிச்சிவா புனே" என்ற முதல் வணிக விழா, நவ.17 அன்று மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் நடைபெற்றது. நட்புறவு அடிப்படையில் இந்தியா மற்றும் ஜப்பானுக்கு இடையிலான வர்த்தகப் பரிமாற்றம், கலாச்சாரம் மற்றும் கல்வி தொடர்பான உறவுகளை வலுப்படுத்துவதே இந்த இரண்டு நாள் விழாவின் நோக்கமாகும்.

55. காலநிலை மாற்றம் குறித்த 27 ஆவது BASIC அமைச்சரவை கூட்டம் நடந்த நகரம் எது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. நவ.19-20 ஆகிய தேதிகளில் புது தில்லியில், காலநிலை மாற்றம் குறித்த 27 ஆவது BASIC (பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா) அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இந்திய சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றத்துக்கான அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன் தலைமைவகித்தார். காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பாரிஸ் உடன்படிக்கையை திறம்பட செயல்படுத்துவதில் வளரும் நாடுகளுக்கு தங்கள் ஆதரவை மேம்படுத்துமாறு முன்னேறிய நாடுகளை BASIC அமைச்சர்கள் வலியுறுத்தினார்கள்.

56. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் தேசிய மதநல்லிணக்க ஆய்வு நிறுவனம் (National Institute of Inter-Faith Studies) அமையவுள்ளது?

**விடை : பஞ்சாப்**

**விளக்கம் :**

1. குருநானக்கின் 550 ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் விதமாக ஆண்டு முழுவதும் நடைபெற உள்ள நீண்டகால நடவடிக்கைகளின் ஒருபகுதியாக சகோதரத்துவத்தையும், பன்முகத்தன்மையையும் மேம்படுத்துவதற்காக பஞ்சாப் மாநிலத்தில் இந்தியாவின் முதல் தேசிய மதநல்லிணக்க ஆய்வு நிறுவனத்தை இந்திய அரசு அமைக்கவுள்ளது. இதற்கான நிலத்தை பஞ்சாப் மாநில அரசு இலவசமாக வழங்கவுள்ளது.

57. அண்மையில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த கர்தார்பூர் வழித்தடம், பஞ்சாப் மாநிலத்தின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

**விடை : குர்தாஸ்பூர்**

**விளக்கம் :**

1. அடுத்த ஆண்டு குருநானக் தேவின் 550 ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படுவதையொட்டி, பஞ்சாப் மாநிலம், குருதாஸ்பூர் மாவட்டத்தின் தேரா பாபா நானக் பகுதியிலிருந்து பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் உள்ள

கர்தார்பூர் சாஹிப் குருத்வாரா செல்வதற்கு வசதியாக வழித்தடம் ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. பாகிஸ்தானின் கர்தார்பூரில் ரவியாற்றங்கரையில் குருத்வாரா தர்பார் சாஹிப் வழிபாட்டுத் தலம் அமைந்துள்ளது. சீக்கிய மத குருவான குருநானக் தேவ் 18 ஆண்டுகள் வாழ்ந்த அவ்விடம், சீக்கிய மக்களின் புனிதத்தலங்களில் ஒன்றாகும்.

58. கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் துளிர்நிறுவன சூழல் மேம்பாட்டுக்காக, இந்திய தொழில் வர்த்தக சபையுடனான (ICC) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள IIM எது?

**விடை : ஐஐம் கல்கத்தா**

**விளக்கம் :**

1. கிழக்கு & வடகிழக்கு இந்தியாவில் துளிர்நிறுவன சூழல் (Startup Ecosystem) மேம்பாட்டுக்காக, இந்திய தொழில் வர்த்தக சபையுடனான (ICC) ஒப்பந்தத்தில் IIM கல்கத்தா புத்தாக்க பூங்கா கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் காப்பகம் மற்றும் தொழிற்சாலையை ஒருங்கிணைத்து ஒரு முறையான வடிவத்தில் கொண்டுவரும்.

59. மலையக மருந்துகள் குறித்த 12 ஆவது உலக மாநாடு நடைபெற்ற நகரம் எது?

**விடை : காத்மாண்டு**

**விளக்கம் :**

1. நவம்பர் 21 அன்று நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் மலையக மருந்துகள் (Mountain Medicine) குறித்த 12 ஆவது உலக மாநாடு தொடங்கியது. 4 நாள் நடைபெற்ற இம்மாநாட்டின் கருப்பொருள், “Mountain Medicine in the Heart of the Himalayas” என்பதாகும். மலையக மருந்துகளில் உள்ள அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கூறுகளில் இம்மாநாடு சிறப்பு கவனம் செலுத்தியது. இந்த மாநாடு மலையேற்றம், பயண மருத்துவம் மற்றும் மருத்துவக் கல்வி தொடர்பான செய்முறை பயிலரங்கங்களையும் உள்ளடக்கியிருந்தது.

60. அண்மைய இந்திய திறன்கள் அறிக்கை – 2019 இன் படி, அதிக வேலைவாய்ப்புதிறன் விகிதம் பெற்று முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

**விடை : ஆந்திரப்பிரதேசம்**

**விளக்கம் :**

1. 6 ஆவது இந்திய திறன்கள் அறிக்கை – 2019 இன் படி, அதிக வேலைவாய்ப்புத்திறன் விகிதம் பெற்று ஆந்திரப்பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் முறையே 2 ஆம் மற்றும் 3 இடத்தை பெற்றுள்ளன. இளையோர்களில் சுமார் எழுபது சதவிகிதம் பேர் தொழில்முறை வழிகாட்டல் இல்லாமை காரணமாக அவர்களது திறமைகளுக்கேற்ற வேலைகளை பெறாமல் உள்ளதாக இவ்வறிக்கை கூறியுள்ளது.

2. அதிவேகமாக நுகரும் நுகர்வோர் பொருட்கள் (FMCG) நிறுவனங்கள் முதல் துளிர்நிறுவனங்கள் வரை, ஒவ்வொரு தொழிற்துறையும் இளைஞர்களுக்கான ஊதியமுள்ள / அற்ற உள்ளகப் பயிற்சி திட்டங்களை வழங்குகிறது என இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

61. எந்த ஆண்டில், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் (தொல்பழங்குடியினர் பாதுகாப்பு) விதிமுறை வெளியிடப்பட்டது.˙.

**விடை : 1956**

**விளக்கம் :**

1. வடமேற்கு சென்டினல் தீவு, அந்தமான் தீவுகளில் ஒன்றாகும், அதில் வங்கான விரிகுடாவில் உள்ள தெற்கு சென்டினல் தீவும் அடங்கும். இந்தத் தீவுகள், எப்போதும் ஆக்ரோஷமாக, எவ்வித வெளியுலக தொடர்பையும் நிராகரிக்கும் சென்டினல் மக்களின் வாழ்விடமாகும். நவீன நாகரிகத்தின் தாக்கம் ஏற்படாத தொல்பழங்குடியின மக்களான இவர்கள், பன்னெடுங்காலமாக இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

2. அண்மையில், வடக்கு சென்டினல் தீவில் வசிக்கும் பாதுகாக்கப்பட்ட சென்டினல் தொல்பழங்குடி மக்களால், அத்தீவுக்கு கிறிஸ்தவ மதத்தை பரப்ப சென்ற அமெரிக்காவை சேர்ந்த ஜான் ஆலன் சவ் கொல்லப்பட்டார். 1927 ஆம் ஆண்டு இந்திய வனச்சட்டத்தின் கீழ், 1956 ஆம் ஆண்டு அந்தமான் மற்றும் நிக்கோபார்

தீவுகள் (தொல்பழங்குடியினரின் பாதுகாப்பு) விதிமுறையின் கீழ், வடக்கு சென்டினல் தீவு மற்றும் அதற்கிடைப்பட்ட மண்டலங்களுக்குள் அந்நியர்கள் உள்ளே நுழைய தடை செய்யப்பட்டுள்ளது.

62. மாநிலத்தின் பூர்வகுடி மொழிகளை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக, 21 அரிய பழங்குடி மொழிகளின் அகரமுதலியை வெளியிட்டுள்ள மாநில அரசு எது?

**விடை : ஒடிசா**

**விளக்கம் :**

1. பல்வகையான தொல்பழங்குடியின மக்களைக்கொண்டுள்ள ஒடிசா மாநிலம், தனது பூர்வகுடி மொழிகளை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக, 21 அரிய பழங்குடி மொழிகளின் அகரமுதலியை வெளியிட்டுள்ளது. பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் தொடக்கக்கல்வி அளவில் மாநில அரசால் தொடங்கப்பட்டுள்ள பன்மொழிக்கல்வித் திட்டத்தில் இந்த இருமொழி பழங்குடி அகரமுதலிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

63. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் மதியிறுக்க நகரியம் (Autism Township) வரவுள்ளது?

**விடை : மேற்கு வங்கம்**

**விளக்கம் :**

1. கொல்கத்தாவுக்கு அருகே உலகத்தரத்திலான மதியிறுக்க நகரியம் அமையவுள்ளது. வளர்ச்சிக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பயிற்சி, சிகிச்சை மற்றும் தங்கும் வசதிகளை இங்கு பெறலாம். இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவதான இதனை 'ரத்னபாலி குழுமம்' என்ற தனியார் நிறுவனமும், மேற்கு வங்க அரசாங்கமும் கூட்டாக இணைந்து கட்டமைக்கவுள்ளன. இந்நகரியத்தை நிர்மாணிப்பதற்கான செலவு ரூ.500 கோடியாக உள்ளது.

64. காடுகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக துத்வா புலிகள் காப்பகத்துடன் இணைந்துள்ள மத்திய ஆயுதக்காவல் படை எது?

**விடை : எஸ் எஸ் பி**

**விளக்கம் :**

1. துத்வா வனப்பகுதி மற்றும் அதன் வளமான வனவுயிரிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக துத்வா புலிகள் காப்பகமும், சசஸ்திரா சீமா பாலும் (SSB) கைகோர்த்துள்ளன. வனப்பகுதிகள் மற்றும் வனவுயிரி குற்றங்களைத் தடுப்பதற்காக துத்வா மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளில் காவல் பணியை வலுப்படுத்துவதற்காக எல்லைப்பாதுகாப்பில் உள்ள SSB உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புப்படைகள் மற்றும் துத்வா களப்பணியாளர்களிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

65. உலகளாவிய நிலையான நகரங்கள் 2025 முன்முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் அவையால் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திய நகரம் எது?

**விடை : நொய்டா**

**விளக்கம் :**

1. ஐக்கிய நாடுகள் அவை தனது உலகளாவிய நிலையான நகரங்கள் 2025 முன்முயற்சிக்கு உ.பி. மாநிலத்தின் நொய்டா & கிரேட்டர் நொய்டா இந்திய நகரங்களை தெரிவு செய்துள்ளது. கௌதம புத்தர் நகர் மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்விரட்டை நகரங்களும், "பல்கலைக்கழக நகரம்" பிரிவில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. உலகெங்கிலும் இருந்து மொத்தம் 25 நகரங்கள் மொத்தம் 5 பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

66. நடப்பாண்டின் சர்வதேச கீதை திருவிழாவில் பங்களிப்பு நாடு எது?

**விடை : மொரிசியஸ்**

**விளக்கம் :**

1. மகாபாரதத்தில் வரும் பிரபல 18 நாள் குருசேத்திர போரின் முதல் நாளில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு வழங்கிய விலைமதிப்பற்ற ஆலோசனைகளைக் கொண்ட புனித நூலான 'ஸ்ரீமத் பகவத்கீதை'யின் தோற்றத்தை நினைவுகூரும் விதமாக வரும் டிசம்பர் 7 – 23 ஆம் தேதி வரை ஹரியானாவிலுள்ள குருசேத்திரத்தில், சர்வதேச கீதை திருவிழா நடைபெறும்.

2. இந்நிகழ்வில் மொரிசியஸ் பங்களிப்பு நாடாகவும், குஜராத் பங்களிப்பு மாநிலமாகவும் இருக்கும். இதுதவிர, 2019 ஆம் ஆண்டு பிப்ரவரியில் மொரிசியசிலும் இந்தக் கீதை திருவிழா நடத்தப்படும்.

67. புத்தாக்கங்களை வளர்த்தெடுப்பதற்கும், உலகளாவிய சவால்களுக்கு தீர்வு காண்பதற்கும் 'தரவு நகரம்' – DataCity என்ற ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

**விடை : கர்நாடகா**

**விளக்கம் :**

1. புத்தாக்கங்களை வளர்த்தெடுக்கவும், உலகளாவிய சவால்களுக்கு தீர்வுகாணவும் பிரான்சை சேர்ந்த 'சூயஸ்' என்ற பொதுப்பயன் குழுமத்துடனும், 'நுமா' என்ற துளிர்நிறுவன முடுக்கியுடனும் இணைந்து 'தரவு நகரம்' என்ற ஒன்றை கர்நாடக மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

2. நகரங்களின் சவால்களை எதிர்கொள்ளவும், தரவு மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்வுகளை உருவாக்கவும் நகர அதிகாரிகள், பெருநிறுவனங்கள் மற்றும் துளிர்நிறுவனங்களை ஒருங்கே கொண்டு வருவதற்கான ஒரு சர்வதேச திறந்த புத்தாக்கத் திட்டமாக 'DataCity' இருக்கும். ஏழு மாத கால திட்டமான இதில், திறமையான போக்குவரவு, நீர் மற்றும் கழிவு மேலாண்மை, ஆற்றல், பொலிவுறு கட்டிடங்கள், பாதுகாப்பு மற்றும் மாசு மேலாண்மை ஆகியவையில் உள்ள வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

68. ஆராய்ச்சி ஒத்துழைப்புக்காக ஆக்லாந்து பல்கலைக்கழகம் அதன் முதல் உத்திசார் கூட்டான்மையை எந்த இந்திய நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ளது?

**விடை : ஐஐடி கரக்பூர்**

**விளக்கம் :**

1. கல்விப்பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பு, ஆசிரியப் பரிமாற்றம் மற்றும் மாணவர் இயக்கம் ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதற்காக ஐஐடி கரக்பூர் அண்மையில் ஆக்லாந்து பல்கலையுடனான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. சுகாதார நல தொழில்நுட்பங்கள், புதிய பொருட்கள், இணைய பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகளை நிறுவனங்கள் பொதுவாக ஆராயும்.

69. அண்மையில் மத்திய மனிதவள மேம்பாட்டமைச்சகத்தால் தொடங்கப்பட்ட பாஷா சங்கம் திட்டத்தின் நோக்கம் என்ன?

**விடை : இந்திய மொழிகளில் பன்மொழி வெளிப்பாட்டை மாணவர்களுக்கு வழங்குவது**

**விளக்கம் :**

1. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது அரசியலமைப்பின் 8ஆவத அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 22 இந்திய மொழிகளையும் பள்ளி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு முயற்சியாக 'பாஷா சங்கம்' என்ற தனித்துவமான திட்டத்தை தொடங்கியுள்ளது. 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' தலைமையிலான இந்தத் திட்டம், நவ.22 ஆம் தேதி தொடங்கப்பட்டு டிசம்பர் 21 ஆம் தேதி வரை தொடரும்.

70. '112' என்ற ஒரே அவசர எண் சேவையை தொடங்கியுள்ள முதல் இந்திய மாநிலம் எது?

**விடை : ஹிமாச்சலப்பிரதேசம்**

**விளக்கம் :**

1. நாடு முழுவதும் அவசர உதவிக்கு ஒரே எண்ணை அழைக்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட '112' என்ற ஒரே அவசர எண் சேவையை, இந்தியாவிலேயே முதல்முறையாக ஹிமாச்சலப்பிரதேச மாநிலம் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முழு மாநிலத்தையும் உள்ளடக்கிய 12 மாவட்ட கட்டளை மையங்களுடன் சிம்லாவில் ஓர் அவசரநிலை பதிலளிப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.

2. இந்த அவசரநிலை பதிலளிப்பு மையமானது ஒரே அவசர எண்ணான '112' உடன் காவற்துறை (100), அவசர ஊர்தி (108), தீயணைப்புத்துறை (101) ஆகியவற்றை ஒருங்கிணைத்து அவசரகால சேவைகளை வழங்கும்.

3. அவசரநிலை பதிலளிப்பு ஆதரவு அமைப்புகள் (ERSS) திட்டத்தின் ஒரு பகுதியாக '112 இந்தியா' என்ற குடிமக்களின் அவசரகாலத்தில் உடனடியாக உதவிகளை வழங்கும் ஓர் அவசர கால செயலியையும் மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது.

# உலக நிகழ்வுகள்

1. உலக வங்கியின் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலுள்ள நாடுகளின் பட்டியலில் (Ease of Doing Business Index) இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

**விடை: 77 ஆவது**

**விளக்கம்:**

1. உலக வங்கி சார்பில் வெளிடப்பட்டுள்ள தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலுள்ள நாடுகளின் பட்டியலில், கடந்த ஆண்டு நூறாவது இடத்ததிலிருந்த இந்தியா, இந்த ஆண்டு 23 இடங்கள் முன்னேறி 73 ஆவது இடத்தை பிடித்துள்ளது. பத்துக்கு ஆறு முக்கிய குறியீடுகளில் இந்தியா குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் கண்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

2. தொழில் தொடங்குதல், கட்டுமான அனுமதிகள் பெறுவது, சொத்தைப் பதிவு செய்தல், கடன் பெறும் வசதி, சிறு முதலீட்டாளர்களைப் பாதுகாப்பது, வரி செலுத்துதல், எல்லைதாண்டிய வர்த்தகம், ஒப்பந்த அமலாக்கம், திவால் தீர்வு ஆகிய 10 அளவுகோள்களின் அடிப்படையில் நாடுகள் பட்டியலிடப்படுகின்றன. மொத்தம் 190 நாடுகள் இடம்பெற்றுள்ள இந்தப் பட்டியலில நியூசிலாந்து, சிங்கப்பூர், டென்மார்க், ஹாங்காங் ஆகிய நாடுகள் முறையே முதல் நான்கு இடங்களில் உள்ளன.

2. உலகின் முதல் இறையாண்மை நீலப் பத்திரத்தை அறிமுகம் செய்துள்ள நாடு எது?

**விடை: செஷல்ஸ்**

**விளக்கம்:**

1. செஷல்ஸ் குடியரசு உலகின் முதல் இறையாண்மை நீலப் பத்திரத்தை அறிமுகம் செய்துள்ளது. இது நிலையான கடல்சார் மற்றும் மீன்வள திட்டங்களுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட ஒரு நிதிக் கருவியாகும். உலக வங்கியின் இப்பத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், Calvert Impact Capital, Nuveen மற்றும் Prudential ஆகிய 3 முதலீட்டாளர்களிடம் இந்தப் பத்திரம்

வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியிலிருந்து $5 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரையிலான உத்தரவாதத்தை இந்த நீலப் பத்திரம் கொண்டுள்ளது.

3. ஐரோப்பிய ஒன்றியத்தின் உலகளாவிய செயற்கைக்கோள் வழிகாட்டல் முறை எது?

**விடை:** Galieo (கலீலியோ)

**விளக்கம்:**

1. சீனா தனது உள்நாட்டு டீநனைுழர உலகளாவிய செயற்கைக்கோள் வழிகாட்டல் அமைப்பின் திறனை அதிகரிப்பதற்காக, அண்மையில் அதன் முதல் புவிநிலை துணைக்கோளான BeiDou- 3 செயற்கைக்கோள் 'GIQ'வை உயர் சுற்றுவட்டப் பாதையில் (புவியிலிருந்து சுமார் 36,000 கி.மீ, தொலைவில்) வெற்றிகரமாக நிலைநிறுத்தியுள்ளது. இது தென்மேற்கு சிச்சுவான் மாகாணத்தில் உள்ள சிச்சாங் செயற்கைகோள் ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது. சீனாவில் பட்டை மற்றும் பாதை திட்டத்தில் உள்ள நாடுகளுக்கு இந்தச் செயற்கைக்கோள் பயன்படும்.

4. இரண்டு மேம்படுத்தப்பட்ட கிரிவக் 3ஆம் வகுப்பு பீரங்கி போர்க்கப்பல் வாங்குவதற்காக, எந்த நாட்டுடனான $950 மில்லியன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?

**விடை:** ரஷ்யா

**விளக்கம்:**

1. இந்தியா கப்பற்படைக்கு இரண்டு மேம்படுத்தப்பட்ட கிரிவக் 3 ஆம் வகுப்பு பீரங்கி போர்க்கப்பல் வாங்குவதற்காக, ரஷ்ய நாட்டுடனான $950 மில்லியன் அமெரிக்க டாலர் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இதையடுத்து இரு புதிய 'திட்டம் 11356' வகை பீரங்கி போர்க்கப்பல்களும் நேரடியாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும். மேலும் இரண்டு கப்பல்களை இந்தியாவில் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் பின்நாளில் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. 23ஆவது உலக பெருநிறுவன விளையாட்டுகளை நடத்தும் நாடு எது?

**விடை: கத்தார்**

**விளக்கம்:**

1. 23ஆவது உலக பெருநிறுவன விளையாட்டுகளை (World Corporate Games) மத்திய கிழக்கு நாடுகளிலேயே முதன்முறையாக கத்தார் நாடு தோஹாவில் நடத்தவுள்ளது. உலகெங்கும் உள்ள நிறுவனங்களுக்கு விளையாட்டு மூலம் அவர்களின் போட்டித்தன்னையை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பை இது வழங்குகிறது. மேலும் முதன்முறையாக, மின்னணு விளையாட்டுக்களும் (e-sports), மனம்சார் (mindsports) விளையாட்டுக்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

6. மேற்கு வங்கத்தில் துர்கா அழுத்தத் தேக்க கட்டுமானத்தை மேற்கொள்வதற்காக் ரூ.18.17 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் இந்தியாவும் எந்த நாடும் கையெழுத்திட்டுள்ளன?

**விடை: ஜப்பான்**

**விளக்கம்:**

1. மேற்கு வங்கத்ததில துர்கா அழுத்தத் தேக்க கட்டுமானத்தை (Project for the Construction of Turga Pumped Storage – 1) மேற்கொள்தற்காக ரூ.18.17 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஜப்பானும் கையெழுத்திட்டுள்ளன. மின்சாரத்தின் தேவை மற்றும் அளிப்புக்கு ஏற்றவாறு செயல்படுவதற்கான திறனை வலுப்படுத்துவது, அழுத்தப்பட்ட மின்தேக்க வசதிகளை கட்டுவிப்பதன் மூலம் மின்சாரம் வழங்குவதற்கான நிலைத்தன்மையை மேம்படுத்துவது ஆகியவற்றின் மூலம் மேற்கு வங்கத்தின் தொழிற்துறை மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பு செய்வதே இநத்த திட்டத்தின் நோக்கமாகும்.

7. எந்த நகரத்தில், காற்று மாசு மற்றும் சுகாதாரம் பற்றிய ஹூர்மூ’வின் முதலாவது உலகளாவிய மாநாடு நடத்தப்பட்டது?

**விடை: ஜெனீவா**

**விளக்கம்:**

1. அக். 30 அன்று ஜெனீவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலையைகத்தில், காற்று மாசு மற்றும் சுகாதாரம் பற்றிய WHO’வின்

முதலாவது உலகளாவிய மநாடு நடத்தப்பட்டது. ஐ.நா. சூழல், உலக வானிலை அமைப்பு, UNFCCC செயலகம், சின்னாள் வாழ்வுடைய மாசுபடுத்திகளை குறைப்பதற்கான காலநிலை மற்றும் துாய காற்று கூட்டணி (CCAC) மற்றும் ஐ.நா பொருாதார ஆணையம் (UNECE) ஆகியவவையுடன் இணைந்து WHO இதனை ஏற்பாடு செய்துள்ளது.

2. **"Improving Air Quality> Combating Climate Change – Saving Lives"** என்பது இந்த மாநாட்டின் கருப் பொருளாகும். உலகெங்கிலும் உள்ள 92% மக்கள் சுகாதாரமற்ற காற்றை சுவாசிக்கிறார்கள், இதன் விளைவாக ஆண்டுதோறும் 6.5 மில்லியன் இறப்புகள் ஏற்படுகின்றன. வீடுகளில் ஏற்படும் காற்று மாசே இதற்கு முக்கியகாரணியாக உள்ளது. மாநாட்டின் முடிவில், 2030ஆம் ஆண்டளவில் காற்று மாசால் ஏற்படும் இறப்பு எண்ணிக்கையை மூன்றில் இரண்டு பங்காக குறைக்க விரும்பும் ஒரு நோக்கத்தை பங்கேற்பாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

8. 18ஆவது IORA வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு நடைபெற்ற இடம் எது?

**விடை: டர்பன்**

**விளக்கம்:**

1. நவம்பர் 2 அன்று "**IORA-Uniting the Peoples of Africa Asia Australasia and the Middle East through Enhanced Co-operation for Peace Stability and Sustainable Development** – அனுமதி, நிலைத்தன்மை மற்றும் நிலையான அபிவிருத்திக்கான மேம்பட்ட ஒத்துழைப்பு மூலம் ஆப்பிரிக்க, ஆசிய, ஆஸ்திரலேசிய மற்றும் மத்திய கிழக்கு மக்களை ஒருங்கிணைத்தல்" என்ற தலைப்பில் 18ஆவது IORA வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பை தென்னாப்பிரிக்கா நடத்தியது.

9. எந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றிய (ITU) கழகத்தின் உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

**விடை: 2019 முதல் 2022 வரை**

**விளக்கம்:**

1. 2019 – 2022ஆம் ஆண்டு வரையிலான நான்காண்டு காலத்திற்கு சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றிய கழகத்தின் உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. துபாயில் நடந்த ITU மாநாட்டின்போது இதற்கான தேர்தல்கள் நடைபெற்றன.

2. இந்தியா 165 வாக்குகளைப்பெற்று, ஆசியா-ஆஸ்திரேலியாவின் பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 13 நாடுகளில் 3ஆவது இடத்தையும், உலகளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 48 நாடுகளிலி 8ஆவது இடத்தையும் பிடித்தது. ITU'வில் மொத்தம் 193 உறுப்பினர்கள் உள்ளனர். 1952 முதல் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இருந்துவருகிறது.

10. ஈரானிடமிருந்து எண்ணெய் பெறுவதற்கு அமெரிக்கா எந்தெந்த நாடுகளுக்கு விலக்கு அளித்துள்ளது?

**விடை: மேலே உள்ள அனைத்தும்**

**விளக்கம்:**

1. நவ.5 அன்று ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா அரசு விதித்தது. ஈரான் வங்கிகள் மற்றும் எரிசக்தி துறை ஆகியவையும் இந்தப் புதிய தடையால் பாதிக்கப்பட்டன. ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்தாத ஐரோப்பிய, ஆசிய நாடுகளும் ஆசிய நிறுவனங்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

2. ஆனால் இந்தியா, சீனா, இத்தாலி, கிரேக்கம், ஜப்பான், தென் கொரியா, தைவான், துருக்கி ஆகிய நாடுகள் மட்டும் ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்துகொள்ள அமெரிக்கா அனுதமியளித்துள்ளது. ஈரானிலிருந்து இறக்குமதியை கணிசமாக குறைத்துக் கொண்டதால் இந்த நாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

11. எந்த நாட்டில், 5ஆவது உலக புத்த மன்றம் நடைபெற்றது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

1. ஐந்தாவது உலக புத்த மன்றம், அண்மையில் சீனாவின் தென்கிழக்கு புஜியான் மாகாணத்திலி உள்ள புதியனில் நடைபெற்றது. 55 நாடுகள் மற்றும் பிராந்தியங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்தர்கள், அறிஞர்கள் மற்றும் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். சீன புத்த சங்கமும், சீன சமய கலாச்சார சங்கமும் கூட்டாக இணைந்து இதனை நடத்தியுள்ளன.

2. நேர்மறையான புத்த கலாச்சார சாரங்களை முன்னெடுத்துச் செல்லுதலும், பௌத்த மதத்துக்கும் பிற மதங்களுக்கும் இடையில் பரிமாற்றங்களை ஊக்குவித்தலுமே இதன் நோக்கமாகும். 2005

12. “மாற்றுத்திறனுடைய இளையோருக்கான உலகளாவிய IT சவால்கள் - 2018” என்னும் நிகழ்வை, எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா நடத்துகிறது?

**விடை: தென் கொரியா**

**விளக்கம்:**

1. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழியங்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளிக்கும் துறையானது கொரிய அரசாங்கம், சர்வதேச புனர்வாழ்வு மையம் மற்றும் LG மின்னணு நிறுவனத்துடன் இணைந்து நவ.9-11 வரை “மாற்றுத்திறனுடைய இளையோருக்கான உலகளாவிய IT சவால்கள் - 2018” என்னும் நிகழ்வை நடத்துகிறது.

2. மாற்றுத்திறனுடைய இளையோர்களிடையே உள்ள திறன்களை மேம்படுத்துவதுடன், தகவல் மற்றும் கணினி தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைப் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதும், குறிப்பாக ஆசிய – பசிபிக் பிராந்தியத்தில் உள்ள மாற்றுத்திறனுடையோர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே 3 நாள் நடைபெறும் இந்த நிதழ்வின் நோக்கமாகும்.

13. உலகின் முதல் AI செய்தி அறிவிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ள செய்தி நிறுவனம் எது?

**விடை: சின்குவா (சீனா)**

**விளக்கம்:**

1. வூஜென் நகரத்தில் நடைபெற்று வரும் ஐந்தாவது உலக இணைய மாநாட்டில், உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு செய்தி அறிவிப்பாளரை சீனாவின் சின்குவா (Xinhua) செய்தி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. சின்குவா செய்தி நிறுவனம் சீனாவின் முதன்மை தேடுபொறி நிறுவனமான ‘Sogou’ உடன் இணைந்து இந்த AI செய்தி அறிவிப்பாளரை தயாரித்துள்ளது.

14. அண்மையில் இந்திய இராணுவத்தில் சேர்க்கப்பட்ட M777 Howitzers எந்த நாட்டிலிருந்து வாங்கப்பட்து?

**விடை: அமெரிக்கா**

**விளக்கம்:**

1. மகாராஷ்டிர மாநிலத்தின் நாசிக் மாவட்டத்திலுள்ள பீரங்கிப்படை மையத்தில், அமெரிக்காவின் தயாரிப்பான M777 155mm/39 Calibre Ultra Light Howitzwr மற்றும் தென் கொரிய தயாரிப்பான K9 VAJRA-T 155mm/52 ஆகிய பீரங்ககிகள் இந்திய ராணுவத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. தவிர, துப்பாக்கிகளை இழுத்துச் செல்லும் கலப்பு வாகன அமைப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

15. 33ஆவது ASEAN மாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை: Resilent and Innovative ASEAN**

**விளக்கம்:**

1. 33ஆவது ASEAN உச்சிமாநாடு “Resilient and Innovative ASEAN” என்ற கருப்பொருளுடன் நவ.11 அன்று சிங்கப்பூரில் தொடங்கியது. முக்கிய நிகழ்வுகள் இங்குள்ள சன்டென் மாநாட்டு அரங்கில் நடைபெறும். ASEAN அமைப்பின் 10 உறுப்புநாடுகளின் தலைவர்கள் இங்கு கூடி பொருளாதாரம், பாதுகாப்பு, கலாச்சார ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதிக்கின்றனர்.

2. இந்த உச்சிமாநாட்டிற்கு சிங்கப்பூர் பிரதமர் லீ சியான் லூங் தலைமைவகிக்கிறார். ஐந்து நாள் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மை (RCEP), கிழக்காசிய உச்சிமாநாடு மற்றும் பின்டெக் விழா போன்ற பல தொடர்புடைய கூட்டங்கள் நடைபெறுகின்றன.

பிரதமர் மோடி 14ஆம் தேதி சிங்கப்பூர் சென்று, இரு நாட்கள் நடைபெறும் கிழக்காசிய உச்சிமாநாட்டிலும், அதுசார்ந்த கூட்டங்களிலும் பங்கேற்கிறார்.

16. பவளப்பாறைகளை அழிக்கும் நச்சு மிகுந்த சூரிய ஒளிகாப்பு களிம்புகளை (Sunscreen) தடை செய்துள்ள உலகின் முதல் நாடு எது?

**விடை: பலாவு**

**விளக்கம்:**

1. பவளப்பாறைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு தீங்கு விளைவக்கக்கூடிய சூரிய ஒளிகாப்பு களிம்புகளை தடைசெய்துள்ள உலகின் முதலாவது நாடாக, மேற்கு பசிபிக் பெருங்கடலில் காணப்படும் தீவுக்கூட்டமான பலாவு குடியரசு மாறியுள்ளது. பலாவு அரசாங்கத்தால் கையெழுத்திடப்பட்ட இந்தச் சட்டம் 2020ஆம் ஆண்டுவாக்கில் அமலுக்கு வரும்.

17. ASEAN பொருளாதார சமூக சபையின் 17ஆவது கூட்டம் நடைபெற்ற நாடு எது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

1. நவ.12 அன்று ASEAN பொருளாதார சமூக சபையின் 17ஆவது கூட்டம், 33ஆவது ASEAN உச்சி மாநாடு மற்றும் அது தொடர்புடைய சந்திப்புகளின் ஒரு பகுதியாக சிங்கப்பூரில் நடைபெற்றது. ASEAN அமைப்பானது பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு முயற்சிகள் தவிர, கட்டற்ற மற்றும் திறந்தநிலை வர்த்தகத்திற்கான அர்ப்பணிப்புடன் அதன் பொருளாதாரங்களை ஒருங்கிணைத்து, ASEAN பொருளாதார சமூக சபையின் ‘செயல்திட்டம் 2025’ஐ நிறைவேற்றுவதை மீண்டும் வலியுறுத்தியது.

18. புற்றுநோய் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பதற்காக எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தில் இந்தியா சமீபத்தில் கையெழுத்திட்டது?

**விடை: ஐக்கிய இராச்சியம்**

**விளக்கம்:**

1. இந்தியா மற்றும் UK ஆகியன சமீபத்தில் புற்றுநோய்க்கான மலிவான அணுகுமுறைகளுக்கான இந்தியா-இங்கிலாந்து புற்றுநோய் ஆராய்ச்சித்திட்டத்துக்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.E10

மில்லயன் (தற்போதைய மதிப்பில் 93 கோடி) பிரிட்டிஷ் பவுண்டுகள் மதிப்பிலான இந்தக் கூட்டிணைவு ஆராய்ச்சித் திட்டமானது, மருத்துவ ஆராய்ச்சி சார்ந்த இந்திய மற்றும் UK வல்லுநர்களை ஒருங்கிணைத்து புற்றுநோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகளுக்கு மலிவான தீர்வுகளை காணும்.

19. 13ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டில் நடப்பில் தலைமை வகித்த நாடு எது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

1. 13ஆவது கிழக்காசிய உச்சிமாநாடு நவ.14-15 ஆகிய இரண்டு தேதிகளில் சிங்கப்பூரின் மத்திய பகுதியல் நடைபெற்றது. கிழக்காசிய பிராந்தியம் மறறும் அதனுடன் இணைந்த நாடுகளின் தேசய தலைவர்கள் பங்கேற்கும் ஆண்டுதோறும் நடைபெறும் கூட்டம் இதுவாகும்.
2. 10 ASEAN நாடுகள் மற்றும் இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, தென்கொரியா, சீனா, ஜப்பான் மற்றும் நியூசிலாந்து ஆகியவை அடங்கிய ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் 18 நாடுகளின் தலைவர்கள் இநத உச்சிமாநாட்டில் பங்கேற்றனர்.

20. எந்த ஆப்பிரிக்க நாட்டின் மீதான தடைகளை ஐ.நா பாதுகாப்பு அவை 9 ஆண்டுகளுக்குப் பிறகு நீக்கியுள்ளது?

**விடை: எரித்திரியா**

**விளக்கம்:**

1. ஆப்பிரிக்க நாடான எரித்திரியா மீது விதிக்கப்பட்ட பல்வேறு பொருளாதார தடைகளை நீக்கவதற்கான தீர்மானம், ஐ.நா பாதுகாப்பு அவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
2. முன்னதாக, சோமாலியாவில் அல் - ஷபாப் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளித்தாகவும், கிழக்கு ஆப்பிரிக்க தீபகற்பத்தில் நிலைத்தன்மையை குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் கூறி, எரித்திரியா மீது ஐ.நா பாதுகாப்பு அவை (UNSC) கடந்த 2009ஆம் ஆண்டில் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது. அதன்படி, அந்நாட்டில் ஆயுத தயாரிப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது. மேலும், நிதிசார் தடைகளும் விதிக்கப்பட்டன.

21. 4ஆவது இன்டெக்ஸ் தெற்காசிய 2018 மாநாடு நடந்த நகரம் எது?

**விடை: கொழும்பு**

**விளக்கம்:**

1. 4ஆவது இன்டெக்ஸ் தெற்காசிய மாநாட்டை நவம்பர் 14 அன்று கொழும்புவில் இலங்கைக்கான இந்திய உயராணையர் தரன்ஜித் சிங் சந்து தொடங்கிவைத்தார். இது தெற்காசியாவின் மிகப் பெரிய சர்வதேச நெசவு கொள்முதல் நிகழ்வாகும்.

2. பருத்தி நெசவுகள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், இந்திய சில்லறை விற்பனையாளாகள் சங்கம் இந்திய ஆடை உற்பததியாளர்கள் சங்கம், இந்திய நெசவுத்தொழில் கூட்டமைப்பு (CITI) போன்ற நிறுவனங்களுடன் இணைந்து வேர்ல்டெக்ஸ் இந்தியா கண்காட்சி மற்றும் ஊக்கவிப்பு என்ற தனியார் நிறுவனம் இந்நிகழ்வை நடத்தியுள்ளது. 15 நாடுகளைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

22. ஆக்ஸ்போர்ட் அகராதியால் 'நடபபாண்டின் சொல்' என தெரிவுசெய்யப்பட்டுள்ளது எது?

**விடை: Toxic**

**விளக்கம்:**

1. ஆக்ஸ்போர்ட் அகராதியில் 'நடப்பாண்டின் சிறந்த சொல்' என Toxic என்ற ஆங்கில சொல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தமிழில் 'நஞ்சு' என்று பொருள். 17ஆம் நூற்றாண்டின் போது லத்தீன் மொழியிலிருந்து (Toxicus), ஆங்கிலத்திற்கு பெறப்பட்ட சொல்தான் 'Toxic' தீயனவற்றை குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

23. எந்த நகரத்தில், உலகின் முதலாவது நிலத்தடி உணவகம் திறக்கப்பட்டுள்ளது?

**விடை: ஷாங்காய்**

**விளக்கம்:**

1. சீனாவில், **"InterContinental Shanghai Wonderland"** என்ற உலகின் முதலாவது நிலத்தடி உணவகம் ஷாங்காயில் திறக்கப்பட்டுள்ளது, இது கிட்டத்தட்ட 90 மீட்டர் ஆழமுடைய பழைய சுரங்கத்தில் கட்டப்பட்டுள்ளது.

மொத்தம் 18 அடுக்குகளில் 336 அறைகளுடன் இந்தச் சுரங்க உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

24. நடப்பாண்டு IMD உலக திறன் தரவரிசையில் இந்தியாவின் தரநிலை என்ன?

**விடை: 53ஆவது**

**விளக்கம்:**

1. அண்மையில் சுவிச்சர்லாந்தின் IMD வணிகப் பள்ளி வெளியிட்ட 'உலக திறன் தரவரிசை – 2018' ஆய்வின்படி, நடப்பாண்டு உலக திறன் தரவரிசைப் பட்டியலில் 2 இடங்கள் பின்தங்கி 53ஆவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது. மொத்தம் 63 நாடுகளில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், சுவிச்சர்லாந்து முதலிடத்தில் உள்ளது. முதலீடு மற்றும் வளர்ச்சி, எளிமையான முறையீடுகள் மற்றும் தயார்நிலை ஆகிய 3 முக்கியக் கூறுகளைக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

25. நாட்டின் வேலைவாய்ப்பு சூழல் குறித்த இந்தியா திறன்கள் அறிக்கை – 2017ஐ (India Skills Report – 2017) வெளியிட்டுள்ள அமைப்பு எது?

**விடை: ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (UNDP)**

**விளக்கம்:**

1. நாட்டின் வேலைவாய்ப்பு சூழல் குறித்த இந்தியா திறன்கள் அறிக்கை – 2017 ஆனது தொழிலாளர் சந்தையில் தேவை மற்றும் வழங்கல் பற்றிய அளவறி மற்றும் பண்பறி பகுப்பு ஆய்வுகளை வழங்குகிறது. இளைஞர்களின் பணிக்குத் தகுதியாக்கம் & பணியமர்த்துநரின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இது திறனறிக்கையை தயார் செயதுள்ளது.

26. 2019ஆம் ஆண்டில் நுரையீரல் நலம் குறித்த 50ஆவது ஐக்கிய உலக மாநாட்டை (50th Union World Conference on Lung Gealth) நடத்தவுள்ள நாடு எது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

1. 2019 அக்.30 முதல் நவ.2 வரை, ஹைதராபாத்தில், நுரையீரல் நலம் குறித்த 50ஆவது ஐக்கிய உலக மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. இந்த மாநாட்டிற்கான கருப்பொருள், "Ending the Emergency:Science leadership

Action" என்பதாகும். காசநோய்க்கு ஒத்திசைந்துள்ள இந்தக் கருப்பொருள், காற்று மாசு மற்றும் புகையிலை பயன்பாடு உள்ளிட்ட நுரையீரல் நலத்திற்கு எதிரான அனைத்து அச்சுறுத்தல்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

27. முதலாவது இந்திய – ரஷ்ய உத்திசார் பொருளாதார பேச்சுவார்த்தை நடந்த நகரம் எது?

**விடை: புனித பீட்டர்ஸ்பர்க்**

**விளக்கம்:**

1. நவ.25 அன்று ரஷ்யாவில் உள்ள புனித பீட்டர்ஸ்பர்க் நகரத்தில், முதலாவது இந்திய – ரஷ்ய உத்திசார் பொருளாதார பேச்சுவார்த்தை நடந்தது.
   இந்தியத்ததரப்புக்கு NITI ஆயோக் துணைத்தலைவர் ராஜீவ் குமாரும், ரஷ்ய பிரதிநிதிகள் குழுவுக்கு ரஷ்ய பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் மேக்சிம் ஒரெஷ்கினும் தலைமையேற்றனர்.
2. வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம் & தொழிற்துறை ஆகியவற்றின் இருதரப்பு உறவுகளின் வளர்ச்சி குறித்து பங்கேற்பாளர்கள் கலந்துரையாடினார்கள். போக்குவரத்து, வேளாண்மை & வேளாண் செயலாக்கம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், டிஜிட்டல் மாற்றம் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் தொழிற்துறை ஒத்துழைப்பு ஆகியவை குறித்தும் இதன் சமயம் விவாதிக்கப்பட்டது.

28. RIMES இன் அண்மைய அறிக்கையின்படி,'அரிதான புயல்' என அறிவிக்கப்பட்ட புயல் எது?

**விடை: டிட்லி புயல்**

**விளக்கம்**

1. கடந்த அக்டோபர் மாதம் ஒடிசா மாநிலத்தில் பேரழிவை ஏற்படுத்திய மிகக்கடுமையான 'டிட்லி' என்று பெயரிடப்பட்ட அப்புயலை'அரிதான புயல் - Rarest Cyclone' என ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவிற்கான பிராந்திய ஒருங்கிணைந்த பல்-அபாய முன்னெச்சரிக்கை அமைப்பு (RIMES), அறிவித்துள்ளது. அதன் அண்மைய அறிக்கையில், இருநூறாண்டுகளில் புயல்

கண்காணிப்பு வரலாற்றில்,’டிட்லி’ புயலை அரிதினும் அரிதான புயல் என தெரிவித்துள்ளது.

2. 2 நாட்கள் கரையைக் கடந்த இந்த ‘டிட்லி’ புயல் கரையோரம் மற்றும் நிலப்பகுதிளில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது ‘டிட்லி’ புயலை கணிப்பதிலும், முன்னெச்சரிக்கை தகவல் இல்லாமை காரணத்தால் அந்தப் புயலின் தாக்கத்தை மேலாண்மை செய்வதிலும் ஒடிசா மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (OSDMA) பெரும் சவால்களை சந்தித்துள்ளதாக RIMES கூறியுள்ளது.

29. கொர்ச் நீரிணையானது எந்தக் கடலுடன் ஆசோவ் கடலை இணைக்கிறது?

**விடை: கருங்கடல்**

**விளக்கம்:**

1. கொர்ச் நீரிணை என்பது கருங்கடல் மற்றும் ஆசோவ் கடலை இணைக்கும் ஒரு நீரிணையாகும். இது ரஷ்ய பெருநிலப்பகுதியிலிருந்து கிரிமியாவை பிரிக்கும் ஒரு குறுகலான கடல் வழிப் பாதையும் ஆகும். இந்த நீரிணையின் மேல் அண்மையிலி கட்டப்பட்ட 11.8 மைல் நீளமுள்ள ஒரு பாலம் கிரிமியாவையும் ரஷ்யாவையும் இணைக்கிறது.

2. இந்தச் சூழலில், கிரிமியா தீபகற்பம் அருகே வந்துகொண்டிருந்த உக்ரைனிய போர்க்கப்பல்கள் மீது ரஷ்ய கடலோரக் காவல்படை தாக்குதல் நடத்தியுடன், அவை நகர முடியாமல் சுற்றி வளைத்துள்ளன. உக்ரைனில் அரசுக்கும், ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் உள்நாட்டுப் போர் தொடங்கிய பிறகு, அந்நாட்டின் அங்கமாக இருந்த கிரிமியா தீபகற்பத்தை ரஷ்ய கடந்த 2014ஆம் ஆண்டில் பலவந்தமாக இணைத்துக்கொண்டது.

30. முதலாவது நீடித்த நீலப்பொருளாதார மாநாடு நடந்த நகரம் எது?

**விடை: நைரோபி**

**விளக்கம்:**

1. முதலாவது நீடித்த நீலப்பொருளாதார மாநாடு – 2018 ஆனது கென்யாவின் நைரோபியில், “நீடித்த வளர்ச்சிக்கான நீலப்பொருளாதாரம் மற்றும் 2030 செயற்பட்டியல் - The Blue Economy and the 2030 Agenda for Sustainable

Development" ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த உலகளாவிய மாநாட்டை கனடாவும், ஜப்பானும் இணைந்து வழங்கின.

31. 13ஆவது G20 உச்சிமாநாடு – 2018 நடைபெறும் நகரம் எது?

**விடை: பியூனோஸ் ஏர்ஸ்**

**விளக்கம்:**

1. 13ஆவது G20 உச்சிமாநாடு, நவ.30 அன்று அர்ஜென்டினாவின் தலைநகரான பியூனோஸ் ஏர்சில், 'Building Consensus for Fair and Sustainable Development – நியாயமான, நீடித்த வளர்ச்சிக்குப் பொதுக்கருத்தை உருவாக்குதல்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறுகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் இம்மாநாட்டில், உலகின் 20 முன்னணி பொருளாதார நாடுகளின் தலைவர்கள், வேளாண்துறை சீர்திருத்தம், பொருளாதார சூழ்நிலைகள் & சுற்றுச்சூழல் மாற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு பொருளாதார சிக்கல்கள் குறித்து விவாதிப்பார்கள்.

# விருதுகள்

1. அதிகாரப்பூர்வமாக ICC கிரிக்கெட் ஹால் ஆ∴ப் ∴பேமில் இணைக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?

**விடை: ராகுல் டிராவிட்**

**விளக்கம்:**

1. ICC Hall of Fame ல் இந்திய முன்னாள் அணித்தலைவர் ராகுல் டிராவிட் இணைக்கப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) சார்பில் சிறந்த கிரிக்கெட் வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஹால் ஆ∴ப் ∴பேம் என்ற கௌரவம் வழங்கப்படுகிறது.

2. திருவனந்தபுரத்தில் இந்தியா, மேற்கு இந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 5ஆவது ஒருநாள் போட்டியின்போது முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் ICC ஹால் ஆ∴ப் ∴பேமில் சேர்க்கப்பட்டதற்கான அடையாள தொப்பியை ராகுல் டிராவிட்டுக்கு வழங்கினார். அதையடுத்து ICC ஹால் ஆ∴ப்

∴பேமில் இடம்பெற்ற 5ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை ராகுல் டிராவிட் பெற்றார். இதற்கு முன் சுனில் கவாஸ்கர், பிஷன் சிங் பேடி, கபில் தேவ், அனில் கும்ப்ளே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

2. புகழ்பெற்ற ராஜாராம் மோகன் ராய் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திரிகையாளர் யார்?

**விடை: N. ராம்**

**விளக்கம்:**

1. புகழ்பெற்ற ராஜாராம் மோகன் ராய் விருதுக்கு தி ஹிந்து குழுமத்தின் தலைவர் பத்திரிக்கையாளர் N. ராம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வரும் நவம்பர் 16 தேசிய பத்திரிக்கை தினத்தன்று இந்திய பத்திரிக்கை கவுன்சிலால் அவருக்கு இவ்விருது வழங்கப்படும்.

3. பாஸ்டனில் இந்தியா குளோபலால் Distinguished Fellow விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை: அனுபவம்.**

**விளக்கம்:**

1. அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் உள்ள பிரபல மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் (MIT) ஸ்லோன் நிர்வாக கல்லூரியில் நடந்த 3ஆவது இந்தியா குளோபல் உச்சிமாநாட்டில், ஹிந்தி நடிகர் அனுபவம் கேருக்கு சிறந்து விருது- Distinguished Fellow வழங்கி கௌரவிக்கப்பட்டது.

4. அண்மையில் பிரான்சிஸ் மிகவுயரிய குடிமக்கள் விருதான Knight of the Legion of Honour விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?

**விடை: ஜவஹர் லால் சரின்**

**விளக்கம்:**

1. தில்லியில் உள்ள Alliance Francaise இன் தலைவரான ஜவஹர் லால் சரினுக்கு அண்மையில் பிரான்சின் மிகவுயரிய குடிமக்கள் விருதான Knight of the Legion of Honour விருது வழங்கி கௌவிக்கப்பட்டது பிரெஞ்சு மொழியினை

ஊக்குவிப்பதற்கும், இந்தோ- பிரெஞ்சு கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குமான அவரது பங்களிப்பை அங்கீகரிக்கும் பொருட்டு பிரான்ஸ் தூதர் அலெக்சாண்டர் சீக்லெர் இந்த விருதை அவருக்கு வழங்கினார்.

2. 1956 ஆம் ஆண்டில் பிரான்கோபைல்சால் ஒரு பிரெஞ்சு சங்கமாக Alliance Francaise de Delhi தொடங்கப்பட்டது 1802 ஆம் ஆண்டில் நெப்போலியன் பெனாபார்ட்டால் Legion of Hanour (செவாலியே விருது) நிறுவப்பட்டது.இது பிரான்சுக்கு சிறந்த சேவை புரிவோருக்கு வழங்கப்படும் பிரான்ஸ் குடியரசின் மிகவுயரிய விருதாகும்.

5. புகழ்பெற்ற ஸ்ட்ராத்கிளைட் பல்கலையாட் அண்மையில் கௌராவ் முனைவர் பட்டம் வழங்கிய கௌரவிக்கப்பட்ட இந்திய மலையேற்ற வல்லுநர் யார்?

**விடை: அருணிமா சின்ஹா**

**விளக்கம்:**

1. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த இந்திய மாற்றுத்திறனாளி பெண் அருணிமா சின்ஹாவுக்கு பிரிட்டனில் உள்ள ஸ்ட்ராத்கிளைட் பல்கலைக்கழகம் கௌரவ முனைவர் பட்டம் வழங்கி கௌவித்துள்ளது. ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடந்த பட்டமளிப்பு விழாவில் அவருக்கு இந்த கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. அருணிமா அறக்கட்டளை மூலம் திருமதி சின்ஹா செய்து வரும் தொண்டுகளும் இதன்மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

6. துணிச்சலான நடப்பாண்டு லண்டன் பத்திரிக்கை சுதந்திர விருது பெற்ற இந்திய ஊடகவியலாளர் யார்?

**விடை: சுவாதி சதுர்வேதி**

**விளக்கம்:**

1. I am a Troll: Inside the Secret World of the Bharatiya Janata Party’s Digital Army என்னும் நூலின் ஆசிரியரும் பத்திரிகையாளருமான சுவாதி சதுர்வேதிக்கு துணிச்சலுக்கான நடப்பாண்டின் பத்திரிகை சுதந்திர விருது வழங்கப்பட்டுள்ளது. லண்டன நகரில் உள்ள புநவவல ஐஅயபநள அலுவலக கருத்தரங்கில் நவ. 8 அன்று நடந்த விழாவில் சுவாதிக்கு இவ்விருது அளிக்கப்பட்டது.

7. தனித்துவமிக்க பிரிவில் பாதுகாப்புக்கான நடப்பாண்டு UNESCO ஆசிய பசிபிக் விருது வென்றுள்ள இந்தியாவின் மறுசீரமைப்பு திட்டம் எது?

**விடை: LAMO மையம்**

**விளக்கம்:**

1. லாடக் பகுதியிலுள்ள பகுதியளவு அழியின் நிலையிலிருந்து ஒரு மாளிகையின் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்ட ஜம்மு மற்றும் காஷ்மீரத்தை சேர்ந்த LAMO (ladakh Arts and Media Organisation) மையம் தனித்துவமிக்க பிரிவில் பாதுகாப்புக்கான 2018 ஆம் ஆண்டு UNESCO ஆசிய- பசிபிக விருதினை வென்றுள்ளது.

2. இதுதவிர, சிறப்புத்துவத்துக்கான விருதினை 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகால சிஸோ- சோபூன்- கோகோ புளோட் மச்சியாவைப் புதுப்பித்தலுக்காக ஜப்பானும், மாண்புமிகு குறிப்பீடுகள் விருதினை மும்பை பல்கலையின் ராஜாபாய் கடிகார கோபுரம் மற்றும் மும்பையின் ருட்டான்ஜீ முல்ஜி ஜேதா நீருற்று ஆகியவையும் பெற்றுள்ளன.

8. யாருக்கு நடப்பாண்டின் முனின் பார்கேவுக்கு அசாமில் விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை: தேுபாபூசன் போராஹ்**

**விளக்கம்:**

1. இளம் எழுத்தாளரும், விமர்சருகமான னுச. தேபாபூசன் போராவுக்கு அசாமில் நடப்பாண்டிற்கான புகழ்பெற்ற முனின் பார்கோடோகி இலக்கிய விருது வழங்கப்பட்டது. அவரெழுதிய சேைடீழஉாழெ என்ற இலக்கிய விமர்சக நூலுக்காக அவருக்கு இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

2. எழுத்தாளர் விமர்சகர் மற்றும் பத்திரிகையாளரான முனின் பார்கோடோகியை நினைவு கூரும் விதமாக இவ்விருது வழங்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டுக்கான முனின் பார்கோடோகி இலக்கிய விருதினை ஹரிஜடுமது என்ற சிறுகதைக்காக அதன் எழுத்தாளர் தலிம் தாஸ் வென்றுள்ளார்.

9. புது தில்லியில் நடந்து ஆறாவது இந்திய சமூகப்பணி மாநாட்டில் யாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கட்டது?

**விடை: மார்த்தா பாரெஸ்**

**விளக்கம்:**

1. புது தில்லியில் நடந்த 6ஆவது இந்திய சமூகப்பணி மாநாட்டில் மறைந்த Dr. மார்த்தா பாடிரலுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்து. பாலின சமத்துவம் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு ஆகியவற்றின் மீதான அவரது வாழ்நாள் பங்களிப்பிற்காக Dr. பாரெஸ் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். ஆப்கானிஸ்தானின் காபூலில் உள்ள விருந்தினர் விருந்தினர் இல்லத்தில் 2015ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதி நடந்த ஒரு பயங்கரவாத தாக்குதலில் கொல்லப்பட்ட 14 பேரில் பாரெலும் ஒருவராவார்.

10. எந்த இந்தியாருக்கு, 2018 உலகளாவிய கல்வித்தலைவர்கள் விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை: சரோஜ் குலாட்டி**

**விளக்கம்:**

1. துபாயில் உள்ள தி அட்லாண்டிசில் நடைபெற்ற இரண்டாவது இந்திய- ஐக்கிய அரபு அமீரக கூட்டாண்மை உச்சி மாநாட்டின் போது, புளூ பெல்ஸ் பள்ளிகள் குழுமத்தின் இயக்குநர் சரோஜ் சுமன் குலாடடிக்கு நடப்பாண்டுக்கான பெருமைமிகு உலகளாவிய கல்வித்தலைவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

11. 24 ஆவது கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவில் (KIFF- 2018) சிறந்த திரைப்படம் விருது வென்ற திரைப்படம் எது?

**விடை: The Third Wife**

**விளக்கம்:**

1. 24ஆவது கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவில் (KIFF- 2018) சிறந்த திரைப்படம் விருதை வியட்நாமி இயக்குநர் ஆஷ்மே.்.பேர் இயக்கிய வுாந வுாசைன றுகைந திரைப்படம் வென்றது. மே.்.பேர் மற்றும் அவரது சகநாட்டு தயாரிப்பாளர் டிரான் தி பிக் கோக் ஆகியோர் ராயல் வங்கப்புலி கோப்பையையும் ரூ. 51 லட்சம் மதிப்பிலான காசோலையையும் பெற்றுக்கொண்டனர்.

12. அமைதி, ஆயுதக்குறைப்பு மற்றும் வளர்ச்சிக்கா நடப்பாண்டில் இந்திரா காந்தி விருது பெற்ற அமைப்பு எது?

**விடை: CSE**

**விளக்கம்:**

1. அமைதி, ஆயுதக்குறைப்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்திரா காந்தி விருது தில்லியைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பான CSE-க்கு (அறிவியல் மற்றும் சுற்றுச்சுழல் மையம்) வழங்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுழல் சீரழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் நிலையான பங்களிப்பை செய்துவருவதற்காக CSE அமைப்புக்கு இந்திரா காந்தி விருது வழங்கப்பட்டுள்ளது.

2. கடந்த 1980 இல் அனில் குமார் அகர்வால் என்ற சுற்றுச்சூழல் ஆர்வலரால் தொடங்கப்பட்ட ஊளுநு அமைப்பானது (தற்போது அதன் தலைவர் சுனிதா நரைன்) கடந்த நாற்பது ஆண்டுகளாக சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு கொள்கைகளை முன்னெடுத்து வருகிறது. இந்திரா காந்தி விருதை வழங்கும் இந்திரா காந்தி அறக்கட்டளையானது, முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை தலைவராகக் கொண்டாதாகும்.

13. வாழ்நாள் சாதனையாளர் விருதுப் பரிவில் நடப்பாண்டு சுமித்ரா சரத் ராம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்திய இசைக்கலைஞர் யார்?

**விடை: அம்ஜத் அலி கான்**

**விளக்கம்:**

1. இந்தியப் பாராம்பரிய இசைத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தமைக்கான 2018ஆம் ஆண்டு சுமித்ரா ராம் விருதானது. உஸ்தத் அம்ஸத் அலி கானுக்கு புது தில்லியில் உள்ள காமணி கலையரங்கில் வழங்கி கௌவிக்கப்பட்டது. முன்னனி இந்தியப் பாரப்பரிய இசைக் கலைஞர்களுள் ஒருவரான அவருக்கு 2001ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

14. மெக்சிகோவின் மிகவுயர்ந்த குடிமகன் கௌரவமான Mexican Order of the Aztec Eagle விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?

**விடை: ஷ்யாமா பிராசாத் கங்குலி**

**விளக்கம்:**

1. இந்தியாவை சேர்ந்த பேராசிரியர் ஷ்யாமா பிரசாத் கங்குலி அவர்கட்கு வெளிநாட்டவருக்கு வழங்கப்படும் மெக்சிகோவின் மிகவுயர்ந்த குடிமகன் கௌரவமான Mexican Order of the Aztec Eagle விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இவ்விருதை நவம்பர் 9 அன்று இந்திய சர்வதேச மையத்தில் நடந்த ஒரு விழாவில் மெக்சிகோ தூதுவர் மெல்பா ப்ரியா வழங்கினார்.

15. நடப்பாண்டு ஆசிய சூழல் அமலாக்க விருது வென்ற இந்திய அமைப்பு எது?

**விடை: வனவுயிரி குற்றத்தடுப்பு செயலகம்**

**விளக்கம்:**

1. இந்திய வனவுயிரி குற்றத்தடுப்பு செயலகமும் (WCCB) அதன் அமலாக்க அலுவலருமான Rs சரத் ஆகியோருக்கு முறையே அமைப்புகள் மற்றும் தனிப்பரிவில் ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதுகளை வென்றுள்ளனர். நாடுகடந்த சுற்றுச்சூழல் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதில் அவரின் சிறந்த பங்களிப்புக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

16. ஐரோப்பிய சுற்றுப்பயணத்தில் சுழழமநை ழக வாந லநயச விருதை வென்ற முதல் இந்திய கோல்ப் வீரர் யார்?

**விடை: சுபாங்கர் சர்மா**

**விளக்கம்:**

1. ஐரோப்பிய சுற்றுப்பயணத்தில் சர்ஹென்றி காட்டன ரூக்கி ஆப் தி இயர் விருதை வென்ற முதல் இந்திய கோல்ப் வீரராக சண்டிகாரை சேர்ந்த சுபாகர் சர்மா மாறியுள்ளார். துபாயில் நடந்த நடப்பாண்டு உலக சுற்றுப்பயண சாம்பியன்ஷிப் நிகழ்வில் அவர் இந்தச் சாதனையை புரிந்தார். ஐரோப்பிய சுற்றுப்பயணத்தில் இதுவரை எந்த இந்தியரும் இந்த விருதை வென்றது இல்லை.

17. மூன்றாவது சாயாஜி விருது கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?

**விடை: அமிதாப் பச்சன்**

**விளக்கம்:**

1. உத்தப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவை சேர்ந்த பல விவசாயிகளின் கடனை அடைத்து சமூக நலனுக்கு சிறந்த பங்களிப்பை மேற்கொண்டமைக்காக வதொதராவில், 3ஆவது சாயாஜி ரத்னா விருது விழங்கி ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன் கௌவிக்கப்பட்டார். உ.பியைச் சேர்ந்த 1398 விவசாயிகளுக்கும், மகாராஷ்டிராவை சேர்ந்த 350 விவசாயிகளுக்கும் தனது பங்களிப்பின் மூலம் அவர் உதவிகளை செய்துள்ளார்.

18. 12ஆவது ஆசிய பசிபிக் திரைப்பட விருதுகளில் FIAPF விருது பெற்ற இந்திய நடிகை யார்?

**விடை: நந்திதா தாஸ்**

**விளக்கம்:**

1. நவம்பர் 29 அன்று பிரிஸ்பேன் நகரத்தில் நடைபெறவுள்ள 12ஆவது ஆசிய பசிபிக் திரைப்பட விருதகள் வழங்கும் விழாவில் (APSA) திரைப்படத் தயாரிப்பாளர் நந்திதா தாஸ் நடப்பாண்டின் சர்வதேச திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்களின் கூட்டமைப்பின் (FIAPF) விருது வழங்கி சர்வதேச திரைப்படத் தயாரிப்பாளர்களின் கூட்டமைப்பின் (FIAPF) விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

19. 49ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (ஐகுகுஐ) வாழ்நாள் சாதையாளர் விருது பெற்றவர் யார்?

**விடை: டான் வோல்மேன்**

**விளக்கம்:**

1. நவ.20 அன்று கோவாவின் பனாஜியில் நடந்த 49ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் இஸ்ரேலிய திரைப்படத் தயாரிப்பாளர் டான் வோல்னே் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌவிக்கப்பட்டார். நடப்பாண்டு விழாவில், சிறப்பு கவனம் பெற்ற நாடாக இஸ்ரேலும் சிறப்பு கவனம் பெற்ற மாநிலமாக ஜார்க்கண்டும் இருந்தது. ஒரு மாநிலம் சிறப்பு கவனம் பெறுவது இதுவே முதல் முறையாகும்.

20. நடப்பாண்டின் FICA வளர்ந்து வரும் கலைஞர் விருது பெற்றவர் யார்?

**விடை: அனுபவம் ராய்**

**விளக்கம்:**

1. திட்டமிட்ட வன்முறை அநீதி ஆகியவை குறித்து ஓவியங்களை தீட்டிய தில்லியை சேர்ந்த ஓவியர் அனுபவம் ராய்க்கு வளர்ந்து வளரும் கலைஞர் (EMERGING ARTIST) விருதும், 90 நாட்கள் சுவிச்சர்லாந்து குடியுரிமையும் அளிக்கப்பட்டுள்ளது. கலையில் சிறந்து விளங்கும் நபர்களுக்கு வளர்ந்து வளரும் கலைஞர் விருதை ஆண்டுதோறும் சுவிச்சர்லாந்தைச் சேர்ந்த கலைக் கழகமான Pro Helvetia உடன் இணைந்து சமகால கலைக்கான அமைப்பு (Foundation for Indian Contemporary Art- FICA) வழங்கி வருகிறது.

21. 2017- 18 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க சுவர்ணஜெயந்தி பெல்லோஸிப்பை மத்திய அரசு யாருக்கு வழங்கியுள்ளது?

**விடை: யுன்யஸ்லோக் பதூரி**

**விளக்கம்:**

1. புவி மற்றும் வளிமண்டலவியல் அறிவியல் துறையில் 2017-18 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க சுவர்ணஜெயந்தி பெல்லோஷிப்பை மத்திய அரசு பேராசிரியர் யுன்யஸ்லோக் பதூரிக்கு வழங்கி உள்ளது. இந்தக் திட்டத்தின் கீழ், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் நவீன பகுதிகளில் ஆராய்வதற்கான தாராள ஆதரவை விஞ்ஞானிகள் பெறுவர். 5ஆண்டுகளுக்கு இது வழங்கப்படும்.

22. பாரம்பரிய இசைக்காக நடப்பாண்டின் பாரத ரத்னா பண்டிட் பீம்சென் ஜோஷி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது?

**விடை: கேசவ் ஜின்டே**

**விளக்கம்:**

1. பாரம்பரிய இசைக்காக நடப்பாண்டின் பாரத ரத்னா பண்டிட பீம்சென் ஜோஷி வாழ்நாள் சாதனையாளர் விருதானது புகழ்மிக்க புல்லாங்குழல் அசைக்கலைஞரான கேசவ் ஜின்டேவுக்கு வழங்கப்படவுள்ளது. மகாராஷ்டிர அரசால் நிறுவப்பட்ட இந்த விருது. பாரம்பரிய இசைக்கலை மேதைகளை கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவருகிறது. இந்த விருத ரூ.5 வட்சம் ரொக்கப் பரிசு, நினைவுப் பரிசு பாராட்டுப் பட்டயத்தை உள்ளடக்கியுள்ளது.

23. 49வது IFFI 2018இல் பெருமைமிக்க தங்கமயில் விருதை வென்ற திரைப்படம் எது?

**விடை: Donbass**

**விளக்கம்:**

1. நவ.28 அன்று கோவாலில் நடந்த 49ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், இயக்குநர் செர்கெய் லோழ்நிஸ்டா இயக்கிய உக்ரைனிய திரைப்படமான டான்பாஸ் திரைப்படம் சிறந்த படத்துக்கான பெருமைமிகு தங்கமயில் விருதினை வென்றது. ரூ40 லட்சம் ரொக்ப்பரிசையும், ஒரு கோப்பை மற்றும் ஒரு பாராட்டுப் பட்டயத்தையும் உள்ளடக்கியது இவ்விருது.

2. கிழக்கு உக்ரைன் பிராந்தியத்தில் திறந்த வெளி ஆயுத மோதல் தொடர்புடைய கலப்பின போரின் கதையினை இந்தக் திரைப்படம் கூறுகின்றது 2019 ஆம் ஆண்டு 91 ஆவது அகாடமி விருதுகளில் சிறந்த பிறமொழி திரைப்பட பிரிவுக்கு உக்ரைனின் அதிகாரப்பூர்வ சமர்ப்பிப்பாக டான்பாஸ் திரைப்படம் உள்ளது.

24. நடப்பாண்டு ICFT UNESCO காந்தி பதக்கம் வென்ற இந்தியத் திரைப்படம் எது?

**விடை: வாக்கிங் வித் தி விண்ட்**

**விளக்கம்:**

1. பிரவீன் மோர்ச்சலே இயக்கிய வாக்கிங் வித் தி விண்ட என்ற திரைப்படம் நடப்பாண்டு ICFT- UNESCO காந்தி பதக்கம் வென்றுள்ளது. இந்த விருது பாரிசின் சாவதேச திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் ஒலி- ஒளி தொடர்பாடல் சங்கம் மற்றும் UNESCO ஆகியவற்றால் நிறுவப்பட்டது.

25. கேரள அரசாங்கத்தின் மிகவுயரிய இலக்கியப்பரிசான எழுத்தச்சன் புரஸ்காரம் விருதுக்கு நடப்பாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: ஆ. முகுந்தன்**

**விளக்கம்:**

1. கேரள அரசின் மிகவுயரிய இலக்கியப்பரிசான எழுத்தச்சன் புரஸ்காரம் விருதுக்கு நடப்பாண்டில் குறிப்பிடத்தக்க மலையாள எழுத்தாளரான M. முகுந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவ்விருது ரூ. 5லட்சம் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ் உள்ளடக்கியது மையாழிப்புழயுடே தீரங்களில் கேசவன்டே

விளபங்கள் தில்லி கதாகள் அப்பம் சுடுன்னே குங்கியம்மா உள்ளிட்டவை அவரது சில படைப்புகளாகும்.

# நியமனங்கள்

1. இந்தோ- திபெத்திய எல்லைக் காவல்படையனி புதிய தலைவர் யார்?

**விடை: S.S தேஸ்வால்**

**விளக்கம்:**

1. 1984 ஆம் ஆண்டைய ஹாரியானா மாநில மூத்த IPS அதிகாரியான S.S தேஸ்வால் அவரது ஓய்வுறு காலமான 2021 ஆக.31 வரை இந்தோ- திபெத்திய எல்லைக் காவல்படையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் R.K பச்நந்தா இந்தப் பதவியில் இருந்தார். இந்தப் பதவி நியமனத்துக்கு முன், சசஸ்திர சீமா பால் படைப்பிரிவின் தலைவராக தேஸ்வால் இருந்தார்.

2. இந்தியாவில் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான எந்த AR/ VR குழுவை IAMAI அமைத்துள்ளது?

**விடை: நம்ரிதா மஹிந்ரோ குழு**

**விளக்கம்:**

1. இந்தியாவில் மிகை மெய்ம்மை மற்றும் தோற்ற மெய்ம்மை (Augmented Reality/ Virtual Reality- AR/ VR) சூழலை உருவாக்குவதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் ஒரு புதிய தொழில் நிபுணத்துவ குழுவை இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகம் (ஐயுஆயுஐ) உருவாக்கியுள்ளது.
2. மஹிந்திரா குழுமத்தின் மின்னணு பரிமாற்றப் பரிவின் மூத்த பொது மெலாளரான நம்ரிதா மஹிந்ரோ இந்தக்குழுவின் தலைவராகவும், இந்தியா மற்றும் தெற்காசியாவுக்கான பேஸ்புக் தலைவர் சத்யஜீத் சிங் இதன் துணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. ஈரானுக்கான இந்தியாவின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: கத்தம் தர்மெந்திரா**

**விளக்கம்:**

1. ஈரானுக்கான இந்திய தூதராக இருந்த சௌரவ் குமார், மியான் மருக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து ஈரானுக்கான புதிய இந்திய தூதராக கத்தம் தர்மேந்திரா (1990: IFS) நியமிக்கப்பட்டுள்ளார்.

4. சர்வதேச குத்துச்சணடை சஙகத்தின் (AIBA) புதிய தலைவர் யார்?

**விடை: கபூர் ரகிமோவ்**

**விளக்கம்:**

1. உஸ்பெக் தொழிவதிபரும், விளையாட்டு நிர்வாகியுமான கபூர் ரகிமோவ், சர்வதேச குத்துச் சண்டை சங்கத்தின் (AIBA) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். AIBA என்பது தொழில் முறை குத்துச்சண்டை போட்டிகளை நடத்தும் மற்றும் உலக சாம்பியன்கள் மற்றும் துணை நிலை சாம்பியன்களை விருது வழங்கி அங்கீகரிக்கும் ஒரு விளையாட்டு அமைப்பாகும். இதன் தலைமையகம் சுவிச்சர்லாந்தின் லோசானில் அமைந்துள்ளது.

5. மக்களவையின் புதிய பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் யார்?

**விடை: சினேகலதா ஸ்ரீவஸ்தாவா**

**விளக்கம்:**

1. சட்டத்துறை செயலாளராக இருந்த சினேகலதா ஸ்ரீவஸ்தாவா நாடாளுமன்ற மக்களிவையின் பொதுச்செயலரா கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நியமிக்கப்பட்டார். மத்தியப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த IAS அதிகாரியான சினேகலாதா நிதித்துறையிலும் கூடுதல் செயலாளர் பொறுப்பை வகித்துள்ளார். சினேஹலதா ஸ்ரீவஸ்தாவின் பதவிக்காலம் 2018 நவம்பர் 30 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

2. இந்நிலையில் மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஸனின் வேண்டுகோளுக்கு இணங்க சினேகலதா ஸ்ரீவஸதாவாவின் பாதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு டிச1 முதல் 2019 நவ. 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சினேகலதா ஸ்ரீவஸ்தாவா, மக்களவையின் முதல் பெண் பொதுச் செயலர் என்பது குறிப்பிடத்தக்கது.

6. அந்திய போட்டி ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் யார்?

**விடை: அசோக் குமார் குப்தா**

**விளக்கம்:**

1. இந்திய போட்டி ஆணையத்தின் புதிய தலைவராக அசோக் குமார் குபதா IAS (1981: தமிழ்நாடு) நியமிக்கப்பட்டுள்ளார். வரும் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 25 வரை அசோக் குமார் குப்தா இந்த ஆணையத்தின் தலைவராக இருப்பார். அதாவது அடுத்த அறிவிப்புகள் வரும் வரையோ அல்லது அவர் 65 வயது வரையோ அவர் இப்பதவியில் இருப்பார்.

2. இந்திய போட்டி ஆணையம் என்பது பல்வேறு துறைகளில் நடைபெறும் சட்டவிரோத வணிக நடைமுறைகளை கண்காணிக்கும் போட்டி சட்டம் (2002) ன் கீழ் 2003 ஆம் ஆண்டு அக்டோபரில் நிறுவப்பட்ட ஒரு நீதித்துறை போன்ற அதிகாரமிக்க அமைப்பாகும்.

7. சர்வதேச தீர்வுகளுக்கான பன்னாட்டு வங்கியால் ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான புதிய தலைமைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: சித்தார்த் திவாரி**

**விளக்கம்:**

1. சர்வதேச தீர்வுகளுக்கான பன்னாட்டு வங்கியால் (BIS) ஆசியா மற்றுமு் பசிபிக்கிற்கான புதிய தலைமைப் பிரதிநிதியாக சித்தார்த் திவாரி நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன் எலி ரெமோலோனா இப்பாவியில் இருந்தார். BIS இல் அவர் மேற்பார்வை செய்யும் பகுதியில் உள்ள BIS மற்றும் மத்திய வங்கிகளுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்த பணியாற்றுவார்.

8. UNICEF இந்தியாவின் முதல் இளையோர் தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீரர்/ வீராங்கனை யார்?

**விடை: ஹிமா தாஸ்**

**விளக்கம்:**

1. நவ 14 அன்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) இந்தியாவின் முதல் இளையோர் தூதராக இந்திய விளையாட்டு வீராங்கனை ஹிமா தாஸ் நியமிக்கப்பட்டார். இதன்மூலம், UNICEF இந்தியாவின் குழந்தைகளுக்கான

விழிப்புணர்வு, அவர்களுக்கான அடிப்படை தேவைகள், உட்பட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கான இவர் இளையோரின் தூதராக செயல்படுவார்.

2. அசாம் மாநிலத்தின் நாகோன் மாவட்டத்தைச் சேர்ந்த தாஸ் 2018, ஆசிய விளையாட்டுகளில் பெண்கள் 4*400 மீ, தொடரோட்டத்தில் தங்கமும், 400மீ, குறுவிரையோட்டத்தில் வெள்ளியும் வென்றார்.

9. சமீபத்தில் NITI ஆயோக் நிறுவிய ஹிமாலய மாநில பிராந்திய கவுன்சிலின் தலைவர் யார்?

**விடை: ஏமு சரஸ்வத்**

**விளக்கம்:**

1. ஹிமாலய பிராந்தியத்தின் நிலையான வளர்ச்சிக்கான ஒரு முயற்சியாக NITI ஆயோக் சமீபத்தில் ஹிமாலய மாநில பிராந்திய கவுன்சிலை அமைத்துள்ளது NITI ஆயோக்கின் உறுப்பினர் Dr. ஏமு சரஸ்வதி தலைமையில் ஹிமாலய மாநிலத்தின் தலைமைச் செயவாளர்கள் மற்றும் மத்திய அமைச்சகங்களின் செயலர்கள் ஆகியோரை உள்ளடக்கி இக்குழு செயல்படும்

2. ஜம்மு மற்றும் காஷ்மீர் உத்தரகாண்ட் மற்றும் ஹிமாச்சலப் பிரதேசம் உட்பட 12 மாநிலங்களை உள்ளடக்கிய ஹிமாலய பிராந்தியத்தின் நிலையான மேம்பாட்டுக்கான மைய அமைப்பாகவும் இந்தக் கவுன்சில் செயல்படும்

10. NLFI மற்றும் யுவுவுகு என்ற இரண்டு திரிபுரா போரராளிக் குழக்களின் மீதான தடையை முடிவுசெய்வதற்கு மத்திய அரசு தீர்பாயத்தை அமைத்துள்ளது. இதன் தலைவர் யார்?

**விடை: சுரேஷ் கைட்**

**விளக்கம்:**

1. திரிபுரா தேசிய விடுதலை முன்னணி (NLFT) மற்றும் அனைத்து திரிபுரா புலிப்படை (ATTF) ஆகிய இரண்டு திரிபுரா சார்ந்த போராளி அமைப்புகளையும் சட்ட விரோதமாக அறிவிக்க போதுமான காரணங்கள் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை முடிவு செய்வதற்காக இந்திய அரசு ஒரு தீர்ப்பாயத்தை அமைத்துள்ளது. சட்டவிரோத நடவடிக்கை (தடுப்பு) சட்டத்தி கீழ் வழங்கப்பட்ட

அதிகாரங்களின்படி மத்திய உள்துறை அமைச்சகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

11. புதிய வருவாய் செயலாராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: அஜய் பூஷண் பாண்டே**

**விளக்கம்:**

1. தற்போதைய வருவாய் செயலாளராக இருந்து வரும் ஹஷ்முக் அதியாவின் பதவிக்காலம் வரும் நவம்பர் 30 அன்று நிறைவடைவதை அடுத்து UIDAI தலைமைச் செயல் அதிகாரியும் GSTN தலைவருமான அஜய் பூஷன் பாண்டேவை புதிய வருவாய செயலாளராக இந்திய அரசு நியமித்து உத்தரவிட்டுள்ளது. அவர் UIDAI தலைமைச் செயல் அதிகாரி பதவியையும், GSTN தலைவர் பதவியையும் கூடுதலாக கவனித்துக்கொள்வார்.

12. இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையத்தின் புதிய தலைவர் யார்?

**விடை: ஜலஜ் ஸ்ரீவஸ்தவா**

**விளக்கம்:**

1. 1984 ஆம் ஆண்டுப் பரிவு IAS அதிகாரியான ஜலஜ் ஸ்ரீவஸ்தவா இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையத்தின் புதிய தலைவராக நியமிகப்பட்டுள்ளார். இந்த நியமனத்திற்கு முன்பாக மத்திய வேளாண் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக இவர் பணியாற்றினார்.
2. புது டில்லி மாநகராட்சியின் தலைவராகவும் VAT துறையின் தலைமைச் செயலராகவும் தில்லி அரசாங்கத்தில் இருந்தபோது சக்தி கேப் திட்டம் மற்றும் URJA ஆகிய திட்டங்களை அவர் அறிமுகப்படுத்தினார். இவர் The Perfect Suicide என்ற குற்றப்பரப்பு நாவலின் ஆசிரியராவார்.

13. சர்வதேச காவல்துறையின் (ஐவேுநசீழுடு) புதிய தலைவர் யார்?

**விடை: கிம் ஜோங் யங்**

**விளக்கம்:**

1. சர்வதேச காவல்துறை அமைப்பின் புதிய தலைவராக தென்கொரிய நாட்டைச் சேர்ந்த கிம்ஜோங் யங் தேர்வு செய்யப்பட்டுள்ளார். துபாயில் நடைபெற்ற இன்டர்போல் உறுப்புநாடுகளின் 87ஆவது கூட்டத்தில் அவர் செய்யப்பட்டார்

இவருக்கு முன் சீனாவைச் சோர்ந்த மெங் ஹோங்வெய் இன்டர்போலின் தலைவராக இருந்தார்.

2. சர்வதேச காவல்துறை (The International Criminal Police Organization-INTERPOL) சாவதேச குற்ற நடவடிக்ககை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு 1923 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காவல்துறை அமைப்பாகும். இது 184 உலக நாடுகளை உறுப்பினர்காளாக கொண்டுள்ளது.

14. UNICEF இன் மிகவும் இளவயதுடைய நல்லெண்ண தூதர் யார்?

**விடை: ஹிமா தாஸ்**

**விளக்கம்:**

1. எம்மி பரிந்துரைத்த பிரிட்டிஷ் நடிகை மில்லி பாபி பிரன்(14) UNICEF இன் மிகவும் இளம் வயதுடைய நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் நவம்பர் 20 உலக குழந்தைகள் தினத்தன்று நியூயார்க்கில் உள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிடம் மற்றும் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அறிவிக்கப்பட்டது.

2. வறுமை, கொடுமைப்படுத்துதல், கல்வி மற்றும் வன்முறை உள்ளிட்ட விவகாரங்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க ஐ.நா இவரை பணித்துள்ளது.

15. UNICEF இந்தியாவில் வடகிழக்கு பிராந்தியத்தின் முதல் இளையோர் வழக்குரைஞர் Youth Advocate ஆக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: ரஹித்**

**விளக்கம்:**

1. குழந்தைகளின் உரிமைகளுக்கு போராடுவதற்காக அசாமிய பாடகர் நஹித் அப்ரின் UNICEF இந்தியாவால் வடகிழக்கு பிராந்தியத்தின் முதல் இளையோர் வழக்குரைஞர்- Youth Advocate ஆக. நியமிக்கப்பட்டுள்ளார். சமுதாயத்தில் மாற்றத்தை விரும்பும் முகவர்களின் குரலாக UNICEF இளையோர் வழக்குரைஞர்களை ஈடுபடுத்தும்.

16. அணுசக்தி கட்டுப்பாட்டு வாரியத்தின் (AERB) தலைவராக நியமிக்கப்பட்டுள்ள புகழ்மிக்க விஞ்ஞானி யார்?

**விடை: நாகேஷ்வர ராவ் குண்டூர்**

**விளக்கம்:**

1. மூன்றாண்டு காலத்திற்கு அணுசக்தி கட்பாட்டு வாரியத்தின (Autimic Energy Regulatory Board- AEFB) தலைவராக புகழ்மிக்க விஞ்ஞர்னி நாகேஷ்வர ராவ் குண்டூர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முதலுறு வேக ஈனுலையின் திட்ட வடிவமைப்பு பாதுகாப்புக் குழுவின் தலைவரும் இந்திய அணுவின் கழகத்திய் புகழ்மிக்க முன்னாள் விஞ்நானியுமாவார்.

17. எந்த அரசியலமைப்புப் பிரிவின் கீழ், குடியரசுத்தலைவரால் UPSC தலைவர் நியமனம் செய்யப்படுகிறார்?

**விடை: பிரிவு 316**

**விளக்கம்:**

1. அரசியவமைப்பின் 316 பிரிவின் கீழ் குடிரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த, அர்விந்த் சக்ஸேனாவை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதிய தலைவராக நியமித்துள்ளார். இவர் 2020 ஆக 7 வரையோ அல்லது 65 வயது வரையோ இந்தப் பதவியில் நீடிப்பார். 2015, இவர் ஓர் உறுப்பினராக UPSC இல் இணைந்தார். UPSC உறுப்பினராக சேர்வதற்கு முன்பு, அவர் விமான ஆராய்ச்சி மையத்தின் (ARC) இயக்குநராக பணியாற்றினார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. எந்த ஏவுகணை மூலம் GSAT-29 செயற்கைக்கோளை ISRO வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது?

**விடை: ஜி எஸ் எல் வி Mk III**

**விளக்கம்:**

1. அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக்கோளான GSAT-29 செயற்கைக்கோளை ஜி எஸ் எல் வி Mk – III D2 ஏவுகணை மூலம் நவ.14 அன்று

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்வான் விண்வெளி ஆய்வு மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது இந்திய விண்வெளி ஆய்வு மையம்.

2. 3423 கி.கி., எடைகொண்ட இந்தச் செயற்கைக்கோளில் நவீன Ku & Ka கற்றைகள் மற்றும் தகவல் தொடர்புக்கான Qv கற்றைகள் இடம் பெற்றுள்ளன. தகவல் தொடர்பு வசதியே பெரும்பாலும் கிடைக்காத பெரிய மலைத்தொடர்கள் சூழ்ந்த இந்தியாவின் வடகிழக்குப் பகுதி கிராமங்கள் மற்றும் ஜம்மு – காஷ்மீர் பகுதிகளில் உயர் தகவல் தொடர்பு வசதியை அளிப்பதே இச்செயற்கைக் கோள் திட்டத்தின் முக்கிய நோக்கம். அதோடு, இதன் மூலம் அதிவேக இணைய வசதியையும் அளக்க முடியும். இந்தச் செயற்கைக்கோள் தொடர்ந்து 10 ஆண்டுகள் செயல்பாட்டில் இருக்கும்.

3. GSLV Mk – III D2 ஏவுகணை முற்றிலும் உள்நாட்டிலேயே இந்திய விண்வெளி ஆய்வு மையத்தால் வடிவமைக்கப்பட்ட ஐந்தாம் தலைமுறை ஏவுகணையாகும். இந்த ஏவுகணை 4000 கி.கி., எடை கொண்ட செயற்கைக்கோளை தாங்கிச் சென்று விண்ணில் புவியின் நீள்சுற்று வட்டப்பாதையில் நிலைநிறுத்தக் கூடியது.

2. தில்லியில் காற்றை தூய்மைப்படுத்துவதற்கு செயற்கை மழையை தூண்டுவதற்காக மத்திய எந்த IIT இன் மேக விதைப்பு திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை: ஐஐடி கான்பூர்**

**விளக்கம்:**

1. தில்லியில் காற்றை தூய்மைப்படுத்துவதற்கு செயற்கை மழையை தூண்டுவதற்காக மத்திய அரசு கான்பூர் IIT இன் மேக விதைப்பு திட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது. வெள்ளி அயோடைடு, உலர் பனிக்கட்டி மற்றும் உப்பு ஆகியவை விமானம் மூலமாக மேகங்களில் தூவப்படும். அதன் காரணமாக மேகங்களின் அடர்த்தி அதிகரித்து மழை பொழிவதற்கு சாதகமான சூழல் உருவாக்கப்படும். இதுவே செயற்கை மழை உருவாக்கும் மேக விதைப்பு வழிமுறையாகும்.

3. எந்த IIT’யை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், பாலில் கலப்படத்தை கண்டறிவதற்காக திறன் பேசி அடிப்படையில் இயங்கும் உணரியை (Smartphone based Sensor) உருவாக்கியுள்ளனர்?

**விடை: ஐஐடி ஹைதராபாத்**

**விளக்கம்:**

1. ஹைதராபாத் IIT’யை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பாலில் கலப்படத்தை கண்டறிவதற்காக திறன்பேசி அடிப்படையில் இயங்கும் உணரியை உருவாக்கியுள்ளனர். ‘ஹாலோகுரோமிக்’ என்று அழைக்கப்படும் நானோ அளவிலான நிறங்காட்டித் தாளில் சில்லு பொருத்தி உணரி அடிப்படையில் வேலை செய்யும் வகையில் இதனை உருவாக்கியுள்ளனர்.
2. இது நைலான் இழையில் 3 விதமான நிறமிகள் கலந்து உருவாக்கப்பட்டுள்ளது. இதிலேற்படும் நிறமாற்றங்களை மிகச்சரியாகக் கண்டறியும் வகையில் திறன்பேசிக்கான படிமுறையை இந்தக் கண்டுபிடிப்பிற்கு தலைமை தாங்கிய பேராசிரியர் கோவிந்த் சிங் தலைமையிலான அணி வடிவமைத்துள்ளது.

4. நில ஆவணங்களை பொது மக்கள் அணுகுவதற்கு வசதியாக ‘Bhudaar’ என்ற வலைத் தளத்தை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?

**விடை: ஆந்திரப் பிரதேசம்**

**விளக்கம்:**

1. ஆந்திரப் பிரதேச மாநில அரசாங்கம் அண்மையில் ‘Bhuseva மற்றும் Bhudaar’ வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஆதார் எண்ணைப் போன்ற தனிப்பட்ட அடையாள எண்கள் மூலம் பொதுமக்களுக்கு நில ஆவணங்களை வழங்குகிறது.

2. ‘பூதார்’ என்பது 11 இலக்க தனிப்பட்ட குறியீடாகும், இது ஒவ்வொரு விவசாய நிலத்திற்கும், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற சொத்துகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நில ஆவணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பூதார் பாதுகாப்புக் கொள்கை ஒன்றை ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அறிமுகப்படுத்தியுள்ளார்.

5. மழையின் தாக்கத்தை கண்காணிக்கவும், இயற்கைப் பேரழிவுகளை சமாளிக்கவும் ‘விளைவு அடிப்படையிலான முன்கணிப்பு அணுகுமுறை’ என்ற ஒரு புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ள இந்திய நிறுவனம் எது?

**விடை: இந்திய வானிலை ஆய்வுத்துறை**

**விளக்கம்:**

1. மழைப்பொழிவால் ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு அதிகரிப்பதை மதிப்பிடுவதற்கான ஒரு புதிய தொழில்நுட்பத்தை இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) உருவாக்கியுள்ளது. நிகழ்வு நடப்பதற்கு முன்பாக அந்நிகழ்வோட்டத்தைக் காட்டும் ‘விளைவு அடிப்படையான முன்கணிப்பு அணுகுமுறை – Impact Based Forecasting Approach’ என்று அழைக்கப்படும் இந்தத் தொழில்நுட்பமானது, மாநில அரசாங்கங்களை மழையின் தாக்கத்தை கண்காணிக்கவும், நிகழ்நேர முடிவுகளை எடுக்கவும் உதவும்.

6. ‘மாரத்தான்’ என்ற புதிய செயற்கைக்கோள் அமைப்பு மூலம் இணைய உலகத்தை (IoT) தொடங்க முடிவு செய்துள்ள நாடு எது?

**விடை: ரஷ்யா**

**விளக்கம்:**

1. ரஷ்ய விண்வெளி நிறுவனமான ‘Roscosmos’, ‘மாரத்தான் - Marathon’ என்ற புதிய செயற்கைக் கோள் அமைப்பு மூலம் இணைய உலகத்தை (IoT) தொடங்க முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய செயற்கைக்கோள், ரஷ்ய செயற்கைக்கோள் கோள விண்மீன் தொகுதியின் ஒரு பகுதியாக இருக்கும். அதோடு, GLONASS வழிகாட்டல் அமைப்பு, புவி தொலையுணர் அமைப்பு, செயற்கைக் கோள் தொடர்பாடல் அமைப்பு மற்றும் தரவு உணர்த்திச் செயற்கைக்கோள் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும். 2026ம் ஆண்டளவில் இந்தக் கோளம் முழுமையாக நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. DAY – NULM இன் கீழ் பயனாளிகளுக்கு வங்கிக்கடன்கள் மீதான வட்டித்தொகை பற்றிய விவரங்களை மின்னணு முறையில் தெரிந்து கொள்வதற்காக ‘PAiSA’ எனப்படும் இணைய தளத்தை வடிவமைத்து உருவாக்கியுள்ள வங்கி எது?

**விடை: அலகாபாத் வங்கி**

**விளக்கம்:**

1. தீன்தயாள் அந்யோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY – NULM) கீழ், பயனாளிகளுக்கு வங்கிக்கடன்கள் மீதான வட்டித்தொகை பற்றிய விவரங்களை மத்தியப்படுத்தப்பட்ட மின்னணு முறையில் தெரிந்து கொள்வதற்காக ‘PAiSA’ எனப்படும் கடன் மற்றும் வட்டித்தொகையை எளிதாக அறிந்து கொள்ளும் இணைப்பக்கம் நவ.26 அன்று மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் புது தில்லியில் தொடங்கி வைத்தது.

2. இதனை செயல்படுத்தும் வங்கியான அலகாபாத் வங்கி இந்த இணையதளத்தை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து 35 மாநிலங்களிலும்/யூனியன் பிரதேசங்களிலும் மற்றும் அனைத்துப் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளிலும் மண்டல ஊரக வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் ‘PAiSA’ இணையதளம் பயன்பாட்டுக்கு வரும்.

8. ISRO வின் HysIS என்ற செயற்கைக்கோளை வெற்றிகரமாக சுற்றுப்பாதையில் ஏவிய ஏவுகணை எது?

**விடை: பி எஸ் எல் வி – சி 43**

**விளக்கம்:**

1. இந்தியாவின் நவீன புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான Hyper Spectral Imaging Satellite (HysIS) மற்றும் 30 அயல்நாட்டு இணை செயற்கைக்கோள்களை, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து நவ.29 அன்று பி எஸ் எல் வி – சி 43 ஏவுகணை மூலம் ISRO வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்தச் செயற்கைக்கோளின் இயக்க காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

2. விவசாயம், காட்டு வளம், புவிசூழல், கடற்கரையோர பகுதிகள், உள்நாட்டு நீராதாரங்கள் போன்றவற்றின் தன்மைகள் குறித்த தகவல்களை இந்தச் செயற்கைக்கோள் படம் பிடித்து அனுப்பும். இதிலுள்ள அதிநவீன படம்பிடிக்கும் கருவி, இடங்களை ஊடுருவி பல கோணங்களில் படம் பிடித்து அனுப்பும் சிறப்புத்தன்மை கொண்டது.

# விளையாட்டு நிகழ்வுகள்

1. ஆசிய ஸ்னூக்கர் சுற்றுப்பயண நிகழ்வில் வெற்றிபெற்ற முதல் இந்திய வீரர் யார்?

**விடை : பங்கஜ் அத்வானி**

**விளக்கம் :**

1. சீனாவின் ஜினான் பகுதியில் நடந்த 2ஆவது ஆசிய 10 ‘ரெட்’ ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில், 19 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற இந்திய வீரர் பங்கஜ் அத்வானி, சீன வீரர் ஜு ரெட்டியை 6-1 என்ற கணக்கில் வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம், இத்தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

2. 2018 FIH ஆண்கள் ஹாக்கி உலகக்கோப்பையின் அதிகாரப்பூர்வ பங்குதாரராக உள்ள இந்திய நிறுவனம் எது?

**விடை : டாடா எ.்.கு**

**விளக்கம்** :

1. 2018 FIH ஆண்கள் ஹாக்கி உலகக்கோப்பையின் அதிகாரப்பூர்வ பங்குதாரராக (Official Partner) டாடா எ.்.கு நிறுவனம் உள்ளது. நவ. 28 முதல் டிச. 16 வரை ஒடிசா மாநிலம் புவனேசுவரில் உள்ள கலிங்கா அரங்கத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. 1982 ஆம் ஆண்டு மும்பை, 2010 ஆம் ஆண்டு புது தில்லி போட்டிகளுக்குப் பின், தற்போது மூன்றாவது முறையாக இந்தியா இந்தப் போட்டிகளை நடத்தவுள்ளது. மொத்தம் 16 நாடுகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன.

3. 13 உலக சாம்பியன்ஷிப் தங்கப்பதக்கங்களை வென்ற முதல் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ஆன சிமோன் பைல்ஸ், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?

**விடை : அமெரிக்கா**

**விளக்கம் :**

1. தோஹாவில் நடந்த உலக ஜிம்னாஸ்டிக்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் தனிநபர் வால்ட் பிரிவில் அமெரிக்க இளம் வீராங்கனை சிமோன் பைல்ஸ், 15.366 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார். இது, உலக பந்தயத்தில் அவர் வெல்லும் 13 ஆவது தங்கமாகும். இதன் மூலம் உலக ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் அதிக தங்கம் வென்று சாதித்த பெலாரஸ் நாட்டு வீரர் விடாலி சேர்போவின் (12 தங்கம்) 22 ஆண்டுகால சாதனையை அவர் முறியடித்தார்.

4. 2018 பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பின் விளம்பர தூதர் யார்?

**விடை : மேரி கோம்**

**விளக்கம் :**

1. 5 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற மேரி கோம், 10 ஆவது பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பின் விளம்பர தூதராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

5. ரோலக்ஸ் பாரிஸ் மாஸ்டரில் நடப்பாண்டு ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?

**விடை : கரண் கச்சனோவ்**

**விளக்கம் :**

1. உலக டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் இரண்டாமிடத்தில் உள்ள நோவக் ஜோகோவிச்சை ரஷ்ய வீரர் கரண் கச்சனோவ் 7-5, 6-4 என்ற நேர் செட்களில் வென்று ரோலக்ஸ் பாரிஸ் மாஸ்டரில் நடப்பாண்டு ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். 2009 ஆம் ஆண்டில் நிகாலே டேவி டென்கோவுக்குப் பின், மாஸ்டர்ஸ் 1000 பட்டத்தை வெல்லும் ரஷ்ய வீரர் கரண் ஆவார்.

6. குவைத்தில் நடந்த 2018 ஆசிய ஷாட்கன் சாம்பியன்ஷிப்பில் ஆடவர் ஸ்கீட் தங்கத்தை வென்ற இந்திய வீரர் யார்?

**விடை : அங்கத் வீர் சிங் பஜ்வா**

**விளக்கம் :**

1. நவ. 7 அன்று குவைத்தில் நடந்த 8ஆவது ஆசிய ஷாட்கன் சாம்பியன்ஷிப்பின் ஆடவர் ஸ்கீட் போட்டியில், அங்கத் வீா் சிங் பஜ்வா 60 புள்ளிகளை பெற்று உலக சாதனையுடன் தங்கத்தை வென்றார். உலக சாம்பியன்ஷிப்பை வெல்லும் முதல் இந்திய ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் வீரா் என்ற பெருமையை அங்கத் பெற்றுள்ளார். சீனாவின் டி ஜின் 58 புள்ளிகளை பெற்றார். UAE இன் சயீத் அல் மக்தூம் 46 புள்ளிகள் பெற்று வெண்கலம் வென்றார்.

7. நடப்பாண்டு பூச்செள சீன ஓப்பன் பாட்மிண்டன் போட்டியில் வென்றவா் யாா்?

**விடை : கெண்டோ மொமோடா (Kento Momota)**

**விளக்கம் :**

1. நவ.11 அன்று நடந்த 23 ஆவது பூச்செள சீன ஓப்பன் பாட்மிண்டன் போட்டியில், ஜப்பானிய உலக சாம்பியனான கெண்டோ மொமோடா, தைவானை சோ்ந்த சோ டியன்-சென்னை 21-13, 11-21, 21-16 என்ற கணக்கில் 66 நிமிடங்களில் தோற்கடித்து போட்டியை வென்றார்.

8. 65 கி.கி பிரிவில் உலகத்தரவரிசையில் முதலிடத்தில் உள்ள இந்திய மல்யுத்த வீரா் யாா்?

**விடை : பஜ்ரங் புனியா**

**விளக்கம் :**

1. உலக மல்யுத்த கூட்டமைப்பு (UWW) வெளியிட்ட தரவரிசைப் பட்டியலின்படி 96 புள்ளிகளுடன் ஆடவா் 65 கி.கி., பிரிவில் பஜ்ரங் புனியா முதலிடத்தை பெற்றுள்ளார். இவா் நடப்பு சீசனில் காமன்வெல்த், ஆசிய போட்டியில் தங்கம், புடாபெஸ்டில் நடந்த உலக சாம்பியன் போட்டியில் வெள்ளி உள்பட மொத்தம் 5 பதக்கங்களை வென்றுள்ளார்.

9. 2018 பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி நடைபெறும் நகரம் எது?

**விடை : புது தில்லி**

**விளக்கம் :**

1. நவ. 15-24 வரை நடக்கும் பெண்களுக்கான பத்தாவது உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகள் தில்லியில் தொடங்கின. இதில் 72 நாடுகளைச்

சேர்ந்த முந்நூறுக்கும் அதிகமான வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இந்தச் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் சார்பில் குத்துச் சண்டை வீராங்கனை மேரி கோம் தலைமையில் 10 பேர் பங்கேற்கின்றனர்.

10. லக்ஷயா சென் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**விடை** : பூப்பந்தாட்டம்

**விளக்கம் :**

1. கனடாவின் மார்கம் நகரத்தில் நடந்த லி நிங் உலக ஜூனியர் பாட்மிண்டன் போட்டியின் தனி நபர் பிரிவில், இந்திய நட்சத்தி வீரர் லக்ஷயா சென், தாய்லாந்தைச் சேர்ந்த முதல்நிலை வீரர் குன்லவுத் விதித்சரனிடம் தோற்று வெண்கலப்பதக்கம் வென்றார். இது BWF உலக ஜூனியர் சாம்பியன்ஷிப்பில், இந்தியா பெறும் ஐந்தாவது ஆடவர் ஒற்றையர் வெண்கலப்பதக்கமாகும்.

11. நடப்பாண்டு U – 17 சிறுவர் சுப்ரோடோ கோப்பைக்கான சர்வதேச கால்பந்து போட்டியில் வென்ற அணி எது?

**விடை : வங்கதேசம்**

**விளக்கம் :**

1. நடப்பாண்டில் நடந்த 59 ஆவது U – 17 சிறுவர் சுப்ரோடோ கோப்பைக்கான சர்வதேச கால்பந்து போட்டியை வங்கதேசத்தின் கிரிதா சிக்ஷா புரோதிஸ்தான் அணி வென்றுள்ளது. புது தில்லியில் உள்ள அம்பேத்கர் அரங்கில் நடந்த இறுதிப் போட்டியில், ஆப்கானிஸ்தானின் அமினி பள்ளி அணியை வீழ்த்தி வங்கதேச அணி கோப்பையை வென்றது. ஆப்கானிஸ்தான், வங்கதேசம் மற்றும் நேபாளைச் சேர்ந்த 8 அணிகள் உட்பட மொத்தம் 95 அணிகள் இதில் பங்கேற்றன.

12. ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட்டில் 11,000 ரன்கள் எடுத்த முதல் வீரர் யார்?

**விடை : வாசிம் ஜாபர்**

**விளக்கம் :**

1. ரஞ்சிக் கோப்பை வரலாற்றில் 11,056 ரன்களை எடுத்து அதிக ரன்கள் எடுத்த வீரர் என்ற பெருமையை வாசிம் ஜாபர் பெற்றுள்ளார். அமோல் முசும்தார் 9202 ரன்கள் அடித்து இரண்டாவது இடத்தில் உள்ளார். நவ.21 அன்று நாக்பூரின் VCA மைதானத்தில் நடந்த 2018-19 ஆண்டுக்கான ரஞ்சிக்கோப்பை போட்டியின் மூன்றாவது சுற்றில், பரோடாவுக்கு எதிரான போட்டியில் 284 பந்துக்கு 153 ரன்கள் எடுத்த போது வாசிம் இந்தச் சாதனையை புரிந்தார்.

13. 2018 ஒடிசா ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பை பாடலுக்கு இசையமைத்தவர் யார்?

**விடை : ஏ.ஆர். ரஹ்மான்**

**விளக்கம் :**

1. 2018 ஒடிசா ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பைக்காக ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்த பாடலை அவரின் முன்னிலையில் அம்மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் வெளியிட்டார். ‘ஜெய்ஹிந்த், ஜெய் இந்தியா’ என்ற இந்தப் பாடலின் வரிகளை பிரபல பாடலாசிரியர் குல்சார் எழுதியுள்ளார். போட்டியின் 14 ஆவது பதிப்பு புவனேசுவரில் உள்ள கலிங்கா அரங்கில், நவ.28 முதல் டிச.16 வரை நடைபெறவுள்ளது.

14. எந்த ஆண்டில், பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில் மேரி கோம் தனது முதல் தங்கப்பதக்கத்தை வென்றார்?

**விடை : 2002**

**விளக்கம் :**

1. புது தில்லியில் உள்ள KD ஜாதவ் உள்ளரங்கத்தில் நடைபெற்ற பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பின் 48 கி.கி., எடைப்பிரிவுக்கான இறுதிப்போட்டியில், உக்ரைனிய வீராங்கனை ஹனா ஒகோட்டாவை வீழ்த்தி உலக பெண்கள் குத்துச்சண்டையில் ஆறாவது முறையாக மேரி கோம் தங்கம் வென்று தனித்துவமான உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். ஏற்கனவே 2002, 2005, 2006, 2008, 2010 உலக குத்துச்சண்டையில் தங்கம் வென்றிருந்தார் மேரி கோம்.

15. கான்பராவில் நடந்த 2018 சீனியர் காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப்பில், தங்கம் வென்ற முதல் இந்தியர் யார்?

**விடை : பவானி தேவி**

**விளக்கம் :**

1. ஆஸ்திரேலியாவில் உள்ள கான்பரா நகரத்தில் நடந்த சீனியர் காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில், இங்கிலாந்தின் எமிலி ரூவாக்சை தமிழ்நாட்டை சேர்ந்த பவானி தேவி 15-12 என்ற கணக்கில் தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றார். இதன்மூலம் காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப் தொடரில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற புதிய வரலாறை அவர் படைத்துள்ளார். முன்னதாக, ஐஸ்லாந்தில் நடந்த Tournoi Satellite வாள்சண்டை சாம்பியன்ஷிப்பில் பவானி தேவி வெள்ளி வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

16. 2018 ICC பெண்கள் உலக 20 – 20 போட்டியில் வென்றுள்ள நாடு எது?

**விடை : ஆஸ்திரேலியா**

**விளக்கம் :**

1. ஆஸ்திரேலிய பெண்கள் தேசிய கிரிக்கெட் அணி, நான்காவது முறையாக ICC பெண்கள் உலக 20 – 20 பட்டத்தை வென்றுள்ளது. ஆன்டிகுவாவில் நடந்த இறுதிப்போட்டியில், ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை தோற்கடித்தது. இந்தத் தொடரில் 225 ரன்கள் குவித்த ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் அலிசா ஜீன் ஹீலே தொடர் நாயகி விருதை பெற்றார்.

17. நடப்பாண்டு சையத் மோடி சர்வதேச பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்ற இந்திய வீரர் யார்?

**விடை : சமீர் வர்மா**

**விளக்கம் :**

1. நடப்பாண்டு சையத் மோடி சர்வதேச பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை சமீர் வர்மா வென்றுள்ளார். ஆடவர் ஒற்றையர் பிரிவில் சீனாவின் குவாங்சு லூவை 16-21, 21-19, 21-14 என்ற கணக்கில் சமீர் தோற்கடித்தார். இந்த வெற்றியின் மூலம், BWF உலக சுற்றுப்பயண இறுதிப்போட்டியில் தனது இடத்தை வர்மா உறுதி செய்துள்ளார்.

18. ICC பெண்கள் உலக 20 – 20 XI இன் அணித்தலைவியாக தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திய விளையாட்டு வீராங்கனை யார்?

**விடை : ஹர்மன்பிரீத் கௌர்**

**விளக்கம் :**

1. ICC பெண்கள் உலக 20 – 20 XI இன் அணித்தலைவியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேலும் ஸ்மிரிதி மந்தனா, பூனம் யாதவ் ஆகிய 2 இந்திய வீராங்கனைகளும் தேர்வாகியுள்ளனர். சர்வதேச பெண்கள் T20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி அண்மையில் நடந்தது. இதில் ஆஸ்திரேலிய மகளிர் அணி, கோப்பையை 4ஆவது முறையாக கைப்பற்றியது.

19. 2018 டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் வென்றுள்ள நாடு எது?

**விடை : குரோஷியா**

**விளக்கம் :**

1. டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் 107 ஆவது பதிப்பை குரோஷியா டேவிஸ் கோப்பை அணி வென்றுள்ளது. இறுதிப்போட்டியில் குரோஷிய வீரர் மரின் சிலிச் 7-6 (7-3), 6-3, 6-3 என்ற நேர் செட்களில் பிரான்சின் லூகாஸ் பவுல்லியை வீழ்த்தியதை அடுத்து, குரோஷிய அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று, 13 ஆண்டுகளுக்குப் பின் டேவிஸ் கோப்பையை வென்றது. இதற்குமுன், 2005 ஆம் ஆண்டில் முதன்முறையாக ஸ்லோவாக்கியா அணியை தோற்கடித்து கோப்பையை வென்றிருந்தது.

20. நடப்பாண்டு 62 ஆவத தேசிய ஷாட் சான் சாம்பியன்ஷிப்பின் பெண்கள் ‘டிராப்’ பிரிவில் தங்கம் வென்ற வீராங்கனை யார்?

**விடை : வர்ஷா வர்மன்**

**விளக்கம் :**

1. ஜெய்ப்பூரில் நடந்த 62ஆவது தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பின் பெண்களுக்கான தனிநபர் ‘டிராப்’ பிரிவு இறுதிப்போட்டியில் 38 புள்ளிகளுடன் ம.பி.யின் வர்ஷா வர்மன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். அடுத்த இரண்டு இடங்களை முறையே தில்லியின் சௌமிய குப்தா (37 புள்ளி, வெள்ளி), ONGC அணியின் ஷாகன் சௌத்ரி (30 புள்ளி, வெண்கலம்) பெற்றனர்.

# பொருளாதார நிகழ்வுகள்

1. NBFC பத்திரங்களுக்கு PCE வழங்க சமீபத்தில் வங்கிகளுக்கு RBI அனுமதியளித்துள்ளது. இதில் ‘PCE’ என்றால் என்ன?

**விடை: Partial Credit Enhancement**

**விளக்கம்:**

1. இந்திய ரிசர்வ் வங்கியியல் பதிவு செய்யப்பட்டு வங்கிசாராத நிதி நிறுவனங்களால் முறையாக வழங்கப்படும் வைப்புத்தொகை எடுத்துக்கொள்ளாத பத்திரங்களுக்கும், தேசிய வீட்டு வசதி வங்கியில் பதிவு செய்யப்பட்டு வீட்டுவசதி நிதியளிப்பு நிறுவனங்களால் வழங்கப்படும் பத்திரங்களுக்கும் பகுதியளவு கடன் மேம்பாடு வழங்க ரிசர்வ் வங்கி சமீபத்தில் அனுமதியளித்துள்ளது.

2. இந்தியாவின் முதல் பிளாக்செயின் வழி கடன் சான்று (LC) பெற்றுள்ள நிறுவனம் எது?

**விடை: ரிலையன்ஸ் தொழிற்சாலைகள்**

**விளக்கம்:**

1. ரிலையன்ஸ் தொழிற்சாலைகள் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த டிரைகான் எரிசக்தி (Tricon Energy) ஆகிய நிறுவனங்களுக்கு இடையே ஏற்றுமதி சம்பந்தப்பட்ட ஓர் ஒப்பந்தத்திற்காக பிளாக் செயின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்தியாவின் முதல் வர்த்தக நிதி பரிவர்த்தனையை HSBC ஹோல்டிங்ஸ் நிறுவனம் செயல்படுத்தியுள்ளது. பிளாக்செயின் செயலாக்கப்பட்ட கடன் சான்று (Letter of Credit – LC) 7 - 10 நாட்கள் வரை நீளும் பரிவர்த்தனை காலத்தை ஒரு நாளுக்கும் கீழாக குறைக்கும்.

3. ஆந்திர மாநிலத்தில் நிலையான வேளாண்மை மேற்கொள்வதற்காக, எந்த சர்வதேச அமைப்பு அண்மையில் $ 172 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: உலக வங்கி**

**விளக்கம்:**

1. மத்திய மற்றும் ஆந்திர மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை ஆந்திரப் பிரதேசத்தின் ஏழை மற்றும் விளிம்புநிலை விவசாயிகளின் வேளாண் உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் பருவகால நெகிழ்திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக $ 172.20 மில்லியன் மதிப்பிலான திட்டங்களுக்கு கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. நிதி ரீதியான செயல்பாடாக விவசாயம் தொடர்ந்து செயல்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தத் திட்டங்கள் முயற்சி செய்கின்றன.

4. எந்தத் துறைமுகக் கூட்டணிக்கு, இந்திய தூர்வாரல் கழக நிறுவனத்தில் உள்ள இந்திய அரசின் 100% பங்குகளை விற்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது?

**விடை: மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்:**

1. பொருளாதார விஷயங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு, இந்திய தூர்வாரல் கழக நிறுவனத்தில் (Dredging Corporation of India Ltd. – DCIL) உள்ள மத்திய அரசின் பங்குகளை 100% விசாகப்பட்டினம் துறைமுக நிறுவனம், பாரதீப் துறைமுக அறக்கட்டளை, ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை மற்றும் கண்ட்லா துறைமுக அறக்கட்டளை ஆகிய 4 நிறுவனங்கள் அடங்கிய கூட்டணிக்கு விற்க கொள்கையளவிலான தனது ஒப்புதலை வழங்கியது.

2. தற்போது DCIL’ இன் 73.44% பங்குகளை இந்திய அரசு வைத்துள்ளது. இந்த நிறுவனம் கடலில் இருந்து மணல் எடுக்கும் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் இதர நிறுவனங்கள் மணல் அள்ளும் வகையில் துறைமுகங்கள் தங்களை விரிவுபடுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கவும் இந்த ஒப்புதல் வழிவகுக்கும்.

5. INSPIRE 2018’ன் போது, EESL மற்றும் ADB ஆகியவை ஒரு EERFI அமைக்க $ 13 மில்லியன் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி மானியத்திற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதில் EERF என்பது எதைக் குறிக்கிறது?

**விடை: Energy Efficiency Revolving Fund**

**விளக்கம்:**

1. புது தில்லியில் நடந்த 2ஆவது INSPIRE 2018 மாநாட்டை (International Symposium to Promote Innovation and Research in Energy Efficiency) மத்திய மின்துறை அமைச்சர் R.K. சிங் தொடங்கி வைத்தார். அப்போது, இந்தியாவில் புதிய, புதுமையான மற்றும் மேற்பட்ட வணிக மாதிரிகளில் முதலீடுகளை ஆதரிப்பதற்காக, நுநுளுடு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை ஓர் ஆற்றல் திறன் மிகு சுழல்நிதியை (Energy Efficiency Revolving Fund – EERF) அமைப்பதற்காக $ 13 மில்லியன் உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி மானியத்திற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

6. பொத்தான்களுடன் கூடிய இந்தியாவின் முதல் ஊடாடத்தக்க கடனட்டையை (Interactive Credit Card) அறிமுகப்படுத்தியுள்ள வங்கி எது?

**விடை: இண்டஸ்இண்ட் வங்கி**

**விளக்கம்:**

1. IndusInd வங்கி சமீபத்தில் ‘IndusInd Bank Next Credit Card’ என்ற பொத்தான்களுடன் கூடிய இந்தியாவின் முதல் ஊடாடத்தக்க கடன் அட்டையை அறிமுகப்படுத்தியது. இந்தக் கடனட்டை, விற்பனை முனையத்தில் (Point of Sale – POS) மூன்று பணம் செலுத்தும் விருப்பத் தேர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

7. IIFCL’ இன் உள் நிதியளிப்பை அதிகரிப்பதற்காக, எந்த சர்வதேச அமைப்புடனான $ 300 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையெழுத்திட்டுள்ளது?

**விடை: ஆசிய வளர்ச்சி வங்கி**

**விளக்கம்:**

1. புது தில்லியில், இந்திய உட்கட்டமைப்பு நிதி நிறுவனத்துக்கு (IIFCL) ஆதரவளிக்கும் விதமாக, ஆசிய வளர்ச்சி வங்கியுடனான $ 300 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது. இது உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நீண்ட கால நிதி வழங்குகிறது.

8. RTI, CVC மற்றும் மாநிலச் சட்டமன்றத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள வங்கி எது?

**விடை: ஜம்மு & காஷ்மீர் வங்கி**

**விளக்கம்:**

1. ஜம்மு & காஷ்மீர் வங்கியானது 2009 ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டம், தலைமை விழிப்புணர்வு ஆணையரின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாநில சட்டமன்றத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீர் முதலமைச்சர் சத்யபால் மாலிக் தலைமையிலான மாநில நிர்வாகக் குழு கூட்டம், ஜம்மு மற்றும் காஷ்மீர் வங்கியை பொதுத்துறை வங்கியாக நிர்வகிக்கும் முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

9. பீகார் மாநில நெடுஞ்சாலைகள் III திட்டத்துக்காக, எந்த சர்வதேச அமைப்புடனான $ 200 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு அண்மையில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: ஆசிய வளர்ச்சி வங்கி**

**விளக்கம்:**

1. பீகார் மாநில நெடுஞ்சாலைகள் III திட்டத்துக்காக, ஆசிய வளர்ச்சி வங்கியுடனான (ADB) $ 200 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு அண்மையில் கையெழுத்திட்டது. பீகாரில் உள்ள சுமார் 230 கி.மீ., மாநில நெடுஞ்சாலையை சாலைப் பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய அனைத்து வானிலைக்கு ஏற்றவாறு அகலப்படுத்தவும், மேம்படுத்தவும் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

# முக்கிய தினங்கள்

1. அண்மையில் எந்தத் தேசியில் உலக சைவ உணவுப்பழக்க தினம் கடைப்பிடிக்கப்பட்டது?

**விடை: நவம்பர் 1**

**விளக்கம்:**

1. சைவ உணவுக்கு மாறுவதன் மூலம் அடையும் பயன்களை நினைவுகூரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் நவ.1 அன்று உலக சைவ உணவுப்பழக்க தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. பால், தயிர், முடடை, பாலாடைக்கட்டி, தேன், மற்றுமு் இறைச்சி போன்ற எந்தவொரு விலங்குசார்ந்த உணவுப் பொருட்களிலும் இருந்து விலகுவதற்கான பழக்கமே சைவ உணவுப்பழக்கம் ஆகும்.

2. ஐ.நாவின் நடப்பாண்டு உலக நகரங்கள் தினத்துக்கான கரப்பொருள் என்ன?

**விடை: Building Sustainable and Resilient Cities**

**விளக்கம்:**

1. உலகளாவிய நகரமளமாக்கலில் ஆர்வங்கொண்ட சர்வதேச சமூகங்களை ஊக்குவிக்கவும் நாடுகள் மற்றும் நகரங்களுக்கிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கவும், நகர்ப்புறமயமாக்கல் சவால்களை எதிர்கொள்ளவும் மற்றும் நிலையான நகர மேம்பாட்டுக்கு பங்களிப்பு செய்யவும் வேண்டி அக. 31 அன்று ஐ.நாவின் உலக நகரங்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாளின் முக்கிய நிகழ்வு இங்கிலாந்து உள்ள லிவர்பூல் நகரத்தில் கொண்டாடப்பட்டது.

2. நடப்பாண்டுக்கான ஐநா அவையின் கருப்பொருள் Building Sustainable and Resilient cities ஆகும். இது சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நகரமயமாக்கலின் முக்கியத்துவத்தை கூறுகிறது. இந்தத்தினத்துக்கான நிலையான கருப்பொருள் Better City- Better Life என்பதாகும். ஒவ்வோர்

3. சமீபத்தில் எந்தத் தேதியில் உலக சுனாமி விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்பட்டது?

**விடை: நவம்பர் 5**

**விளக்கம்:**

1. ஆழிப்பேரலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 5 அன்று உலக சுனாமி விழிப்புணர்வு தினம் கடைபிடிக்கப்படுகிறது. எப்போதாவது ஒருமுறை அதிசயமாக நேரக்கூடிய ஓர் இயற்கை சீற்றம்தான் ஆழிப்பேரலை. ஆனால் இது மிகவும் பயங்கரமானது. கடந்த 100 ஆண்டுகளில் ஏற்ப்பட்ட 58 ஆழிப்பேரலைகளால் மட்டும் 2,60,000 பேர் மாண்டுள்ளார்கள்.

4. நடப்பாண்டு இந்திய தேசிய ஆயுர்வேத தினத்தின் கருப்பொருள் என்ன?

**விடை: Ayurveda for Public Health**

**விளக்கம்:**

1. பொது மக்களின் நலன் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக Ayurveda for Public Heath என்ற கருப்பொருளுடன் நடப்பாண்டு இந்திய தேசிய ஆயுர்வேத தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நாள் ஆயுர்தேுவதத்தின் பலம் மற்றும் அதன் தனிப்பட்ட சிகிச்சை கொள்கைகளின் கவனம் செலுத்துகிறது. ஆயுர்வேதத்தின் பிரதான நோக்கம் நோய்த்தடுப்பு & சுகாதார மேம்பாடு ஆகும்.

2. ஆயுர்வேதத்தின் தெய்வீக பரப்புநராக தன்வந்திரி கருதப்படுகிறார். ஆயுர்வேத மருத்துவத்தில் அவரது பங்களிப்பு மிக அதிகம். அதிகம் இதனாலேயே ஒவ்வோர் ஆண்டும் தன்வந்திரி பிறந்தநாளன்று (தீபாவளிக்கு முதல் நாள்) இந்திய தேசிய ஆயுர்வேத தினம் கொண்டாடப்படுகிறது.

5. அண்மையில் எந்தத் தேதியில் இந்தியாவில் தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் (National Cancer Awareness Day) கடைப்பிடிக்கப்பட்டது?

**விடை: நவம்பர் 7**

**விளக்கம்:**

1. புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிதல் புற்றுநோய்க்கு வழிகோலும் வாழ்க்கை முறையை தவிர்த்தல் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தேசிய அளவில் புற்றுநோயின் தாக்கத்தை குறைப்பதை தடுக்கும் தடைகளை நீக்குவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.7 அன்று இந்தியரிவல்

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் (National Cancer Awareness Day) கடைப்பிடிக்கப்படுகிறது.

2. நாட்டில் 2.9 மில்லியன் புற்றுநோயாளிக் இருப்பதாகவும், ஒவ்வோர் ஆண்டும் 1.1 மில்லியன் புதிய நோயாளிகள் பதிவாவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. புற்றுநோயாளிகளில் மூன்றில் இரண்டு பேர் புற்றுநோயின் தீவிர கட்டத்தில்தான் கண்டறியப்படுகிறார்கள்.

6. நடப்பாண்டு உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அறிவியல் தினத்தின் (World Science Day for Peace and Development) கருப்பொருள் என்ன?

**விடை: Science a Human Right**

**விளக்கம்:**

1. பொது மக்களிடையே அறிவியலின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஊற்படுத்துவதற்காக ஒவ்வொர் ஆண்டும் நவம்பர் 01 அன்று உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அறிவியல் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தையும் இந்நாள் சிறப்பிட்டுக் கூறுகிறது. உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 70ஆவது பிரகடனத்துடன் கொண்டாடப்படும் நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், அறிவியல் ஒரு மனித உரிமை என்பதாகும்.

7. நடப்பாண்டுக்கான உலக நீரிழிவு தினத்தின் கருப்பொருள் என்ன?

**விடை: The Family and Diabetes**

**விளக்கம்:**

1. நீரிழிவு நோயை கண்டறிவது தடுப்பது மற்றும் நிர்வகிப்பது குறித்து குடும்பங்களிடையே விழிப்புணர்வு ஊற்படுத்துவற்காக ஒவ்வொர் ஆண்டும் நவம்பர் 6 அன்று உலக நீரிழிவு தினம் கடைபிடிக்கப்படுகிறது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் குடும்பம் மற்றும் நீரிழிவு- நீரிழிவு ஒவ்வொரு குடும்பத்துடனும் சம்பந்தப்பட்டது என்பதாகும்.

8. நடப்பாண்டு உலக நுரையில் அழற்சி தினத்துக்கான கருப்பொருள் என்ன,

**விடை: Stop Pneumonia: Invest in Child health**

**விளக்கம்:**

1. பொது சுகாதாரப்பிரச்சனையான நுரையீரல் அழற்சியின் தீவிரத்தன்மையை எடுத்துரைக்கவும், அந்நோயை எதிர்த்துப் போராட மேலும் அமைப்புகள் நாடுகளை ஊக்கப்படுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 2 அன்று உலக நுரையீரல் அழற்சி தினம் (World Pneumonia Day) கடைபிடிக்கப்படுகிறது. குழந்தை நுரையீரல் அழற்சி பிரச்சனை எதிர்த்துப் பொது மற்றும் அரசியல் ஆதரவைத் திரட்ட உருவாக்கப்பட்ட குழந்தை நுரையீரல் அழற்கிக்கு எதிரான உலக அரமப்பால் (GCCP) முதன்முறையாக 2009 ஆம் ஆண்டில் இந்த நாள் கடைபிடிக்கப்பட்டது.

2. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புக்கு முக்கியக்காரணமாக இருக்கும் நுரையீரல் அழற்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நுரையீரல் அழற்சியிலிருந்து காப்பதும் அதைத் தடுப்பதும் சிகிச்சைகளை ஊக்குவிப்பதும் நுரையீரல் அழற்சி நோயை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை உருவாக்குவதுமே இந்த நாளின் நோக்கமாகும். நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருள் Stop pneumonia: Invest in Child Health என்பதாகும்.

9. சமீபத்தில் எந்தத் தேதியில் இந்தியாவில் தேசிய பத்திரிக்கை தினம் கொண்டாடப்பட்டது?

**விடை: நவம்பர் 16**

**விளக்கம்:**

1. 1966ஆம் ஆண்டில் இந்திய பிரஸ் கவுன்சில் நிறுவப்பட்டதை நினைவுகூரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் நவ. 16 அன்று தேசிய பத்திரிக்கை தினம் (National Press Day) கொண்டாடப்படுகிறது. இந்தியப் பத்திரிக்கைளின் சுதந்திரம் மற்றும் பொறுப்பின் அடையாளமாகவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

10. அணடமையில் எந்தத் தேதியில் உலக சகிப்புத்தன்மை தினம் அனுசரிக்கப்பட்டது?

**விடை: நவம்பர் 16**

**விளக்கம்:**

1. உலக சகிப்புத்தன்மை தினம் (International Day for Tolerance) என்பது பொது மக்களிடையே சகிப்புணர்வின்மையின் பயங்கரமான விளைவுகளையும் சகிப்புத்தன்மை & அகிம்சையின் தேவையை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகவும் உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் நவ.16 அன்று கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாகும்.

11. இந்தியாவில் எந்த விடுதலைப் போராட்ட வீரரின் பிறந்தநாள் தேசிய கல்வி தினமாக (National Education Day) கொண்டாடப்படுகிறது?

**விடை: மௌலானா அபுல்கலாம் ஆசாத்**

**விளக்கம்:**

1. தேசிய கல்வி தினம் இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் நவ.11 அன்று கொண்டாடப்படுகிறது. சுதந்திர இந்தியாவின் முதல் கல்வியமைச்சராக விளங்கிய மௌலானா அபுல்கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவுகூரும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது. 15 ஆகஸ்ட் 1947 முதல் 2 பிப்ரவரி 1958 வரை இவர் கல்வியமைச்சராகப் பணியாற்றினார். 1992 ஆம் ஆண்டு இவருக்கு இந்தியாவின் உயரிய குடிமை விருதான பாரத ரத்னா மறைந்த பிறகு வழங்கப்பட்டது.

12. இந்தியாவில் எந்தத் தேதியில் முதலாவது இயற்கை மருத்துவ தினம் கொண்டாடப்பட்டது?

**விடை: நவம்பர் 18**

**விளக்கம்:**

1. நவ 18 அன்று மத்திய ஆயுஷ் அமைச்சகம் தனது முதல் இயற்கை மருத்துவ தினத்தை தேசிய அளவில் கொண்டாடியது உணவு மற்றும் வாழ்க்கை முறைகளை மாற்றியமைப்பதன் மூலம் நோய்களை தடுக்கும் மருந்தில்லா மருத்துவ முறையை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

13. நடப்பாண்டு உலக கழிப்பறை தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை**: **When Nature Calls**

**விளக்கம்:**

1. உலகளாவிய துப்புரவு நெருக்கடியை சமாளிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.19 அன்று உலக கழிப்பறை தினம் அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள் When Nature Calls என்பதாகும். அடிப்படைக் கழிப்பறை வசதிகள் பற்றியும் அது குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதுமே இந்நாளின் முக்கிய நோக்கமாகும்.

14. எந்தத் தேதியில் நடப்பாண்டு ஆப்பிரிக்க தொழில்மயமாக்கல் தினம் அனுசரிக்கப்பட்டது?

**விடை: நவம்பர் 20**

**விளக்கம்:**

1. தொழில்மயமாக்கல் தொடர்பாக ஆப்பிரிக்க கண்டம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து உலகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.20 அன்று ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம் (Africa Inustrialization Day) கடைபிடிக்கப்படுகிறது. ஆப்பிரிக்க கண்டமானது உலகின் இரண்டாவது மிக அதிக மக்கள் தொகை கொண்ட (1.2 பில்லியன் மக்கள் தொகை அல்லது உலக மக்கள் தொகையில் 16%) கண்டமாகும். இருந்தபோதும், சர்வதேச வர்த்தகம் மற்றும் உற்பத்தியில், ஆப்பிரிக்கா 2 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

2. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Promoting Regional Value Chains in Africa: A Pathway for accelerating Africa's structural transformation and pharmaceutical production" என்பதாகும்.

15. நடப்பாண்டு சர்வதேச குழந்தைகள் தினத்தின் கருப்பொருள் என்ன?

**விடை: Children are taking over and turning the world blue**

**விளக்கம்:**

1. குழந்தைகளிடையே சர்வதேச ஒற்றுமை, விழிப்புணர்வு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் நலன்களை காப்பதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 20 அன்று சர்வதேச குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருள்,

"Children are taking over and turning the world blue" என்பதாகும். 1954ஆம் ஆண்டில் இந்நாள் நிறுவப்பட்டது.

16. 2018 உலக COPD (நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்) தினத்தின் கருப்பொருள் என்ன?

**விடை: Never too early> never too late**

**விளக்கம்:**

1. நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (Chronic Obstructive Pulmonary Disease-COPD) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், உலகம் முழுவதும் இந்த நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோயால் பாதிப்படைந்தவர்களுக்கான சிகிச்சையை மேம்படுத்துவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் நவ.21 அன்று நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்க்கான உலகளாவிய முன்னெடுப்பு (COLD) இந்நாளை கடைபித்துவருகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், Never too early, never too late என்பதாகும்.

17. 2018 பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு தினத்தின் கருப்பொருள் என்ன?

**விடை: Orange the World: # SupportMe Too**

**விளக்கம்:**

1. பெண்களுக்கும் சிறுமியர்களுக்கும் எதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.25 அன்று பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் 16 நாள் செயல்பாட்டின் தொடக்கத்தையும் குறிக்கிறது.

2. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள் Orange the World: # Hear Me Too என்பதாகும். வன்முறையிலிருந்து தப்பிப்பிழைத்த பெண்கள் மற்றும் சிறுமியர்களின் ஓங்கி ஒலிக்கும் குரலாக இந்த # HearMeToo உள்ளது.

18. இந்தியாவில் எந்தத் தேதியில் தேசிய சட்ட தினம் கொண்டாடப்படுகிறது?

**விடை: நவம்பர் 26**

**விளக்கம்:**

1. 1949 ஆம் ஆண்டு நவ.26 அன்று அரசியல் சாசனம் நிறைவேட்டப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொர் ஆண்டும் அதே தினத்தன்று தேசிய சட்ட தினம் அல்லது அரசியல் சாசன தினம் கொண்டாடப்படுகிறது. இந்தியா விடுதலை அடைந்த பின்னர் கடந்த 1949 ஆம் ஆண்டு Dr. B. R அம்பேத்கர் தலைமையில் அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. பின்னர் இந்தியா குடியரசு பெற்ற 1950 ஜனவரி 26 அன்று அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

2. இந்நிலையில் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியான நவம்பர் 26ஆம் தேதியை சிறப்பிக்கும் வகையில் 2015 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் அரசியலமைப்பு நாளாக ஒவ்வோர் ஆண்டும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2015 ஆம் ஆண்டில் இந்நாள் தெரிவு செய்யப்படும் போது Dr. B.R அம்பேத்கரின் 125ஆவது பிறந்தநாளாகும். அம்போத்கரின் எண்ணங்களை பரப்பவும், அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை பரப்பவும் இத்தினம் தேர்ந்தெடுக்கப்ட்டது.

19. இந்தியாவில் எந்தத்தேதியில் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது?

**விடை: நவம்பர் 26**

**விளக்கம்:**

1. இந்தியாவின் வெண்மைப்புரட்சியின் தந்தையான டாக்டர். வர்கீஸ் குரியனின் பிறந்தநாளை குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவ.26 அன்று தேசிய பால் தினம் (National Milk Day) கொண்டாடப்படுகிறது. பால் உற்பத்தியில் உலகளவில் 50 ஆவது இடத்திலிருந்த இந்தியாவை சில பத்தாண்டுகளிலேயே மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற்றிய உலகின் மிகப்பெரிய பால் வளர்ச்சித்திட்டமான Operation Floodl உருவாக்கியவர் Dr. வர்கீஸ் குரியன் ஆவார்.

20. எந்தத் தேதியில், இந்திய உடலுறுப்பு தான தினம் கடைப்பிடிக்கப்படகிறது?

**விடை: நவம்பர் 27**

**விளக்கம்:**

1. மனிதர்கள் தங்களின் மரணத்திற்குப்பிறகு உறுப்புகளை தானம் செய்ய உறுதியேற்பதற்கும், உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவதற்குமாக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 27 அன்று இந்திய உடலுறுப்பு தானம் தினம் அனுசரிக்கப்படுகிறது.

2. தில்லியில் மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய உடலுறுப்பு மற்றும் திசு மாற்று அறுவைச்சிகிச்சை அமைப்பு (NOTTO) சார்பில் நடப்பாண்டில் 9 ஆவது இந்திய உடல் உறுப்பு தான தினம் கொண்டாப்படுகிறது.

# புத்தகங்கள்

1. “The Fire Burns Blue: A History of Women’s Cricket in India” என்ற நூலை எழுதிய விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் யார்?

**விடை: காருண்யா கேசவ்**

**விளக்கம்:**

1. **“The Fire Burns Blue: A History of Women’s Cricket in India”** என்ற நூலை காருண்யா கேசவ் மற்றும் சித்தாந்தா பதக் ஆகிய இரண்டு விளையாட்டுத்துறை பத்திரிக்கையாளர்களும் இணைந்து எழுதி உள்ளனர். இந்த நூல் பெண்கள் கிரிக்கெட் வரலாற்றை விரிவாக கூறுகிறது.

2. “Notes of a Dream the Authorized Biography of A.R. Rahman” என்ற நூலின் ஆசிரியர் யார்?

**விடை: கிருஷ்ணா திரிலோக்**

**விளக்கம்:**

1. ஆஸ்கர் விருது வென்ற இசையமைப்பாளர் A.R. ரஹ்மானின் வாழ்க்கையை “Notes of a Dream the Authorized Biography of A.R. Rahman” என்னும் பெயரில் கிருஷ்ணா திரிலோக் என்பவர் சுய சரிதையாக எழுதி அண்மையில் மும்பையில் வெளியிட்டுள்ளார். இந்நூலில் A.R. ரஹ்மான் தனது

குழந்தைப்பருவ வாழ்க்கை, இளமைப்பருவம், திரையுலக அனுபவங்கள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

3. “A Great Association – Glimpses into the Life of Swami Bhoomananda Tirtha” என்ற நூலின் ஆசிரியர் யார்?

**விடை: நிர்விசேஷானந்தா தீர்த்தா**

**விளக்கம்:**

1. “A Great Association – Glimpses into the Life of Swami Bhoomananda Tirtha’ என்ற நூலை சுவாமி நிர்விசேஷானந்தா தீர்த்தா எழுதியுள்ளார். இதனை அண்மையில் பிரசார் பாரதி நிறுவனத்தில் தலைமை நிர்வாக அதிகாரி சசி சேகர் வேம்பதி & ஸ்ரீதரன் ஆகியோர் வெளியிட்டனர். இந்நூல், கேரளாவின் நாராயணஸ்ரம தபோவனத்தின் புகழ்மிக்க துறவியான சுவாமி பூமாநந்தா தீர்த்தாவின் வாழ்க்கை வரலாறு பற்றியது.

- **“நெருப்பு நீல நிறத்தில் எரிகின்றது** : இந்தியப் பெண்கள் கிரிக்கெட்டின் வரலாறு” என்ற புத்தகத்தை விளையாட்டுப் பத்திரிக்கையாளர்களான காருண்யா கேசவ் மற்றும் சித்தாந்தா பதக் ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர். இப்புத்தகம் நவம்பர் 30ம் தேதியில் வெளியிடப்படவிருக்கிறது.
- இது இந்தியப் பெண்கள் கிரிக்கெட்டின் வரலாற்றைப் பற்றிய புத்தகமாகும். இது வெஸ்ட்லேண்ட் ஸ்போர்ட்ஸின் புதிய பதிப்பகத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படவிருக்கிறது


**Useful Links**

Recent Exam Notifications : https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs : http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram : https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video : https://www.youtube.com/user/weshineacademy

TNPSC Group II Answer Key : https://weshineacademy.com/tnpsc-group-2-answer-key-2018/